மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

கிச்சு கிச்சு விளையாடி மணல் வீடு கட்டுகிறார்கள்!

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 | 21-2-60 | ஒலி 16

வள்ளுவர் தபால் தலை!

தி. மு. க. செய்த சாதனை!

விடுதலைப் பெற்று பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு உலகப் பெரும் புலவர் திருவள்ளுவரின் திருஉருவப் படம் தபால் தலைகளில் பொறிக்கப் பட்டிருக்கிறது! இதற்காக இந்திய சர்க்காரையும், இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி கண்ட தலைவர்களையும் நாம் மனப்பூர்வமாகப் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்!

திருவள்ளுவரின் அருமை பெருமைகளைப் பற்றி வடவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம்! ஆனால் தென்னவர்களுககு அந்தப் பொய்யா மொழிப் புலவரைப் பற்றி, அந்தப் பொய்யா மொழிப் புலவர்ப் படைத்த உலகப் பெரு நூல் திருக்குறளைப் பற்றி தெரியாமலிருக்க முடியாது!

திருவள்ளுவர் ஆஸ்திகரா? நாஸ்திகரா? தெரியாது—சொல்லவும் முடியாது!

திருவள்ளுவர் சைவரா? வைணவரா? தெரியாது—தெரிந்து கொள்ளவும் முடியாது!

திருவள்ளுவர் கண்ட கடவுள் எது? நமக்குக் காட்டிய கடவுள்தான் எது? யாமறியோம், யாமறியோம்!

திருவள்ளுவர் ஒரு ஜாதிக்குச் சொந்தமானவரல்ல, ஒரு மதத்திற்குச் சொந்தமானவரல்ல, எந்த கடவுளுக்கும் உரிமையானவரல்ல!

திருவள்ளுவர் ஹிந்துவுக்கும் சொந்தம், முஸ்லீம் மக்களுக்கும் சொந்தம், கிறிஸ்துவர்களுக்கும் சொந்தம், நாஸ்திகர்களுக்கும், சொந்தம் ஆஸ்திகர்களுக்கும் சொந்தம்! எல்லா நாட்டினருக்கும் சொந்தம்!

அவர் படைத்த நூலில் எல்லாமிருக்கிறது--இல்லாதது ஒன்றுமே இல்லை

அவர் காட்டிய பாதையில் நடந்தால் குடி இருக்காது, சூத்தி இருக்காது—சூது இருக்காது, வஞ்சமிருக்காது—பொய் இருக்காது, களவு இருக்காது—பொறாமை இருக்காது, பொச்செறிப்பு இருக்காது — ஆண்மையற்ற தன்மையுமிருக்காது, அடிமை என்ற நிலையுமிருக்காது!

இத்தகைய பெருமை படைத்த பேறிஞரைப் பாராட்ட பதின்மூன்று ஆண்டுகள் பிடித்திருக்கின்றன! காரணமென்ன? வடக்கு, தெற்கு என்ற பேதம்தானே? திருவள்ளுவர், தமிழர் தென்னகத்தில் பிறந்தவர் என்ற காரணம்தானே?

வடவர்கள் மீது மட்டும் நாம் குற்றம் சாட்டிப் பயன் இல்லை! தமிழர்களுக்கும் இந்தக் குற்றச் சாட்டில் பெரும் பங்குண்டு!

ஒரு பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்களுக்கே திருவள்ளுவரைத் தெரியாது, திருககுறளும் புரியாது! ஏன், இப்போதுகூட படிககாத பாமர மககளில் பலருக்கு திருவள்ளுவரைத் தெரிந்திருக்க நியாயமில்லை!

துளசி தாசரை தெரிந்திருக்கும் தமிழர்களைவிட, பக்த மீராவை அறிந்திருக்கிற தமிழர்களைவிட, ராமனையும், கிருஷ்ணனையும் தெரிந்திருககிற தமிழர்களைவிட, திருவள்ளுவரை அறிந்திருக்கிற தமிழர்களின் தொகை குறைவு, மிக மிகக் குறைவுதான்!

பாரதம் படித்தவர்களின் தொகை இங்கே அதிகமுண்டு, இராமாயணம் படித்தவர்களின் எண்ணிக்கை இங்கே ஏராளம் உண்டு! திருக்குறளைப் படித்தவர்களின் எண்ணிககையை விரல் விட்டே எண்ணி விடலாம்!

இந்த நிலை மாறியதற்கு யார் காரணம்? "கால மாற்றம் தான் காரணம்" என்பார்கள் உழைப்புக்கு மதிப்புத்தராத உலுத்தர்கள், சிலர்!

திராவிட முன்னேற்றக் கழகம் திருவள்ளுவரைக் காட்டிய பிறகுதான், திராவிட முன்னேற்றக் கழகம் திருக்குறளை கையிலெடுத்துக் கொடுத்தப் பிறகு தான்—மக்கள் மத்தியில் திருவள்ளுவர் பாராட்டப் படுகிறார்! இந்த உண்மையை நேர்மையானவர்கள் எவருமே மறுக்க முடியாது!

இன்றைய தினம் வள்ளுவரின் உருவப் படம் தபால் தலையில் பொறிக்கப் பட்டிருப்பதற்கே நாம் தான் காரணம் என்றால் அதுவும் தற்பெருமையாகாது!

பல ஆண்டுகளாக மேடைகளிலே, மாநாடுகளிலே மக்கள் மத்தியிலே விடுத்த| கோரிக்கை தான், இன்று செயல் வடிவமாகி இருக்கிறது!

நம்மைப் பற்றி புரிந்தவர்கள், நம் வலிவைப் பற்றித் தெரிந்தவர்கள், நம்மோடு பல காலம் இருந்தவர்கள் இந்திய சர்க்காரோடு போராடி இந்த வெற்றியைப் பெற்றிருக்கின்றனர்! அவர்களை இந்த சந்தர்ப்பத்தில் நாம் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்!

காங்கிரஸ் கட்சிக்கு பெரும் வைரியாக விளங்கி, சுயமரியாதை குடும்பத்தில் அல்லும் பகலும் உழைத்து வந்த—இப்போது மத்திய அரசாங்கத்தில் அமைச்சராக அமர்ந்திருக்கும் மாஜி சுயமரியாதை வீரர்—இல்லை, இல்லை—"எங்கிருந்தாலும் நான் சுயமரியாதைக்காரன் தான்" என்று எடுத்துக் காட்டுவதற்காக இந்தப் பணியில், இறங்கி வெற்றியும் கண்டார் என்றும் சொல்லப் படுகிறது! அவருக்கும் நாம் நன்றி செலுத்திடக் கடமைப் பட்டுள்ளோம்!

திருவள்ளுவரின் உருவம் எப்படியிருக்கும் என்பதையே அறியாத பலர் பலவிதமான உருவங்களை வரைந்து பெரும் குழப்பத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த நேரத்தில்—"இவர் தான் திருவள்ளுவர்" என்பதை எல்லோரும் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளும் வகையில் திருவள்ளுவரின் உருவம் வரைந்துத் தந்த ஓவியர் திரு. வேணுகோபால் அவர்களை தமிழகம் என்றும் மறவாது! அவரது ஆற்றலையும், கற்பனைத் திறத்தையும் கைவண்ணத்தையும் தமிழகத்தின் சார்பில் பாராட்டி நன்றியையும் செலுத்துகிறோம்! மேலும் மேலும் உருவம் தெரியாது, மறைக்கப்பட்டு, பகுத்தறிவு வாதியின் மனத்திரையில் மட்டும் ஒளி குன்றாது, உயிரோவியமாக வீற்றிருக்கும் தமிழ்ப் புலவர்களின் திருஉருவத்தையும் வரைந்து நாட்டிற்கு நல்ல பணியினை அவர் செய்ய வேண்டுமென்பதே எங்கள் ஆவாவாகும்!

தமிழகத்தில் பிறந்து உலகப் புகழ் பெற்ற திருவள்ளுவரை காலம் தாழ்த்திப் பாராட்டினபோதிலும், இப்போதாவது நம்மை 'அடிமைகள் தானே" என்று ஒதுக்கித் தள்ளிவிடாமல் ஓரளவு நமக்கு மதிப்பளிக்க முன் வந்த இந்திய சர்க்காரை மீண்டும் ஒரு முறை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்!

தமிழர்கள் இனியாவது திருவள்ளுவரை அறிந்து, திருக்குறளைத் தெரிந்து பயன் பெற முன்வரவேண்டும்!

திருவள்ளுவரின் உருவத்தை தபால் தலையில் பொறித்து விட்டால் மட்டும் போதாது, அவர் காட்டிய வழியில் ஆட்சியும் செய்ய வேண்டும்!

இந்த வகையில் திருவள்ளுவரின் தபால் தலை பயன் படட்டும்!

விடுதலைப் பயிருக்கு நல்ல நாற்றங்கால் வட சென்னை - பெத்துநாயக்கன்பேட்டையே!

தியாகராயர் திருவடிப் பட்ட மண் இது! இங்கே விடுதலைப் படைத் திரள வேண்டும்!

சென்னை, வண்ணையம்பதியில், சர். பி. டி. தியாகராயர் நினைவு மன்றம் துவக்க விழாவும், பொங்கல் விழாவும் தோழர் மா. ரா. தேவராசன் தலைமையில் நடைபெற்றது.

தோழர் த. சேதுராசன் அவர்கள் வரவேற்றுப் பேசுகையில் தியாகராயரின் பணிகளை குறித்தும், திராவிடர் சமுதாயத்தின் வளர்ச்சிக்காக தொண்டாற்றிய சிறப்புகள் குறித்தும் பேசினார்.

தியாகராயர் பெருமை குறித்து அறிஞர் அண்ணா விளக்கம்!

பின்னர் அறிஞர் அண்ணா அவர்கள் பேசியதாவது—

அன்புள்ள தலைவரவர்களே, அருமைத் தோழர்களே!

இந்த வட்டாரத்திலே உள்ள தோழர்கள், தமிழர்களின் வாழ்வு செழிக்கவும், தமிழ் சமுதாயத்துக்கு புது வாழ்வு அளிப்பதற்காகவும் தன் வாழ்நாளை அர்ப்பணம் செய்த சர். பி. டி. தியாகராயர் அவர்கள் பெயராலே மன்றத்தினை துவக்கி, இந்த விழாவினை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

தியாகராயர் நினைவு மன்றத்தினை திறந்து வைக்கின்ற உரிமையை அன்போடு அளித்திருக்கின்ற தோழர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வட சென்னையிலே இருக்கின்ற வீதிகளிலே மட்டுமல்ல, இல்லங்களிலே மட்டுமல்ல, நல்லவர்கள் உள்ளந்தோறும் இருக்க வேண்டியவர் சர். பி.டி. தியாகராயராவார்!

இங்கு நின்று பேசிக் கொண்டிருக்கிற இதே இடத்திற்கு நேராகத் தான் தியாகராயர் வாழ்ந்த இல்லம் இருக்கிறது! இங்கிருந்து கிளம்பிய அறிவு ஒளி, தமிழகம் மட்டுமல்ல, திராவிடம் முழுமையுமே பரவியது!

தமிழர்களின் நல்வாழ்வுக்காக அரும்பாடுபட்ட தியாகராயர் வாழ்ந்த பகுதியிலே நீங்கள் வாழ்கிறீர்கள்! அவர் திரு அடி பட்ட மண்ணிலே வாழ்கிறீர்கள்! ஆகவே, திராவிடத்தின் விடுதலைக்கு இப்பகுதி அடித்தளமாக அமைய வேண்டும்!

நண்பர்கள் கூறினார்கள், இந்தப் பகுதியிலேயே இரண்டு முறை காமராஜர் பேசினார் என்று! காமராஜர், தான் சார்ந்திருக்கிற கட்சியைப்பற்றி பெருமைப்படப் பேசி இருப்பாரே தவிர, தியாகராயரைப் பற்றி பேசியிருக்க மாட்டார்! தியாகராயர் எங்கே; காமராஜர் எங்கே?

இன்று, தியாகராயர் வாழ்ந்த மாளிகை பறி போய் விட்டது என்றாலும், தமிழ்ப் பெருங்குடி மக்களின் நெஞ்சத்திலே அவர் இன்னும் நீங்காமலேயே இருக்கிறார்! காமராசர் தியாகராயருக்கு வணக்கம் தெரிவித்திருந்தால், நன்றி செலுத்தியிருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்போம், நன்றி காட்ட கடமைப் பட்டிருப்போம்! காமராசர் இதை ஏன் செய்யவில்லையென்றால், நாட்டு வரலாறு அவருக்குத் தெரியாது!

பார்ப்பன அல்லாதார் சமுதாயம் விடுதலை பெறவேண்டுமென்பதற்காகவும், தமிழர்கள் சரிசமமாக வாழவேண்டும் என்பதற்காகவும் பாடுபட்ட தியாகராயரின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்கின்ற வாய்ப்பை காமராசர் பெறவில்லை! நாட்டு வரலாறு தெரியாதவர்! அவரிடம் எப்படி நன்றி உணர்ச்சியை எதிர்பார்க்க முடியும்? நல்லவர்கள் நன்றி செலுத்தட்டும்! தமிழ் சமுதாயம் பார்ப்பனரல்லாத திராவிட இனம் வாழ அரும்பாடுபட்ட தியாகராயரின் புகழும், பெயரும் அழியாது— மறையாது!

சென்னை மாநகராட்சி மன்ற ஆட்சி பொறுப்பை ஏற்றுக் கொண்டதும் தோழர்கள் என்னிடத்திலே வந்து என்ன செய்ய வேண்டும் என்று என்னிடம் கேட்டனர்!

நீங்கள் ஒவ்வொருவரும் வெள்ளை மாளிகைக்குள் காலடி எடுத்து வைப்பதற்கு முன், வெள்ளை மாளிகைக்கு முன் இருக்கும் தியாகராயர் சிலைக்கு மாலையிட்டு வணக்கம் செலுத்தி விட்டு 'உம்முடைய வழியிலே நடக்கிறோம். நீங்கள் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து நடத்த நாங்கள் வந்திருக்கிறோம். தமிழர்களை தட்டி யெழுப்புகிற எழுச்சிக்கு உங்கள் கொள்கைகளை வழி காட்டியாகக் கொள்வோம் என்று உறுதி கூறி விட்டுச் செல்லுங்கள் என்றேன். அதன் படி தோழர்கள் செய்து விட்டு உள்ளே சென்றார்கள்!

சோகச் சிலையாக இருந்ததை, அந்த நேரத்தில் உற்றுப் பார்த்திருந்தால் சோகச் சிலையின் முகத்திலே மலர்ச்சி ஏற்பட்டதை கண்டிருக்க முடியும்!

தோழர்கள் தியாகராயருக்கு வணக்கம் செலுத்தி விட்டு உள்ளே சென்றவர்கள் இன்று நல்ல முறையிலேயே பணியாற்றி வருகிறார்கள்.

நண்பர்கள், இம்மன்றத்தினை தியாகராயர் பெயரால் ஏற்படுத்தி இருப்பது கண்டு நான் உள்ளபடியே பாராட்டுகிறேன்!

வழக்கத்திற்கு மாறாக என்னை ஊர்வலத்தில் சிக்க வைத்து விட்டார்கள்! ஊர்வலம் நடத்த விரும்புகின்ற தோழர்கள், கட்டுப்பாட்டோடு நடத்த பயிற்சி பெற வேண்டும். மக்கள் நெருக்கடியாக உள்ள இடங்களிலே ஊர்வலங்கள் நடத்தக் கூடாது. ஊர்வலம் நடத்துவதால் அதிக தொல்லைகள் ஏற்படுகின்றன! இதற்கு இரண்டு காரணங்கள் சொல்லலாம்!

(4-ம் பக்கம் பார்க்க)

வெங்காயத்தை உறித்தால் வெறும் தோல் தான் கிடைக்கும் - அதையே வடையாக சுட்டால் வாயெல்லாம் இனிக்கும் !!

காமராசருக்கு வடைத் தட்டி சாப்பாடு போடுங்கள்!

அப்போது வெங்காயத்தின் அருமை தெரியும் !

திராவிடத்தின் பெருமையும் புரியும் !

(அண்ணா பேச்சு)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று, இப்படிப்பட்ட இடநெருக்கடியான வீதிகளிலே ஊர்வலம் அமைப்பதால்-நீங்கள் ஏற்பாடு செய்திருக்கின்ற கூட்டத்தின் சிறப்பு கெட்டு விடுகிறது! இதனால் போலீசாருக்கும் சங்கடம்!

உங்களுக்கிருக்கின்ற ஆர்வத்தால் இப்படி ஊர்வலம் நடத்துகிறீர்கள். இப்படி கூறுவதால் ஆர்வத்தை குறைக்கிறேன் என்று கருதிவிடக் கூடாது!

ஊர்வலத்தில் வருவதற்கு சங்கடப்பட்ட என்னை, குண்டுகட்டாகத் தூக்கி காரிலே வைத்தார்கள். கூட்டத்திற்கு வருவதற்கு முன்னே உங்களுக்கு என்னென்ன கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று கருதிக் கொண்டு வந்தேனோ அவைகளை பாதி சிதைத்தார்கள்! ஆகவே, அந்தக் கருத்துக்களை நெருக்கி விட்டார்கள்! ஊர்வலத்தில் நான் பட்ட சிரமத்திற்கு, களைப்பு நீங்குவதற்கு நண்பர்கள் எத்தனை கப்டீ கொடுத்தாலும் போன கருத்து வராது! ஆகவே நண்பர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன், மறுபடியும் இத்தகைய ஊர்வலங்களில் என்னை ஈடுபடுத்தாதீர்கள்!

இந்தக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் நண்பர் தேவராசன் முன்னாலே காங்கிரஸ்காரராக இருந்தவர்!

அவர் பேசிய போது காங்கிரசை விட்டு கழகத்திலே சேர்ந்ததன் காரணத்தை சொன்னார். அவர் பேசிய கருத்துக்கள். இங்கு எழுகின்ற பெருஞ்சத்தத்தாலே கேட்டிருக்க மாட்டீர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபடுகின்ற போராட்டத்தில் நேரடியாக தொடர்பு கொள்வதற்கு தயாராக இருப்பதாகவும், சிறைச் சாலைக்கு செல்ல சித்தமாக இருப்பதாகவும் கூறினார்கள். இப்படிப்பட்ட நெஞ்சுரங் கொண்டவர்களை, காங்கிரசிலே இருந்து நம்ப பக்கம் இழுக்க வேண்டும். மாற்றார் உள்ளத்திலேயும் நமது கொள்கை பதிய வேண்டும், அதற்கான முயற்சியிலே நமது தோழர்கள் ஈடுபட வேண்டும்! அப்படிப்பட்டவர்களை சேர்த்து, கழகத்திற்கு அதிக செல்வாக்கை தேடித் தர வேண்டும்!

இந்தக் கூட்டத்திலே கலந்து கொள்ள வேண்டுமென்பதற்கான மற்றொரு காரணம்! வடசென்னை என்றால் எனக்கு அலாதி பிரியம் உண்டு! ஏனென்றால் ஒரு காலத்தில் இங்கே இருந்து பழக்கப்பட்டவன்,நான்! எந்தெந்த வழியிலே போனால் அடுத்த தெருவுக்குப் போகலாம், பக்கத்து வீதிக்கு எந்த வழியால் போகலாம் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்! இங்கே இருக்கின்ற அத்தனை வீதிகளிலும் ஒண்டிக் கட்டையாக உலாவியிருக்கிறேன்! உருட்டுவிழிகாரர்களைச் சந்தித்திருக்கிறேன்! மிரட்டல் பேர்வழிகளை பார்த்திருக்கிறேன்! 'இந்தத் தெருவிலே அண்ணாத்துரை வரட்டும், வந்தால் அவன் தலையிருக்காது, அது என்னிடத்தில் தான் இருக்கும்' என்று கூறியவர்களையும் பார்த்திருக்கிறேன்!

மேலும் உங்களை நம்பித்தான் தலைமைக் கழகத்தையே வடசென்னையில் வைத்திருக்கிறேன். பற்றும் பாசமும் வைத்து மகிழ்ச்சியோடு, உடன் பிறந்த சொந்த அண்ணனை அன்போடு அண்ணா என்று அழைப்பது போல என்னை அண்ணா என்றழைத்து. பல்லாயிரக் கணக்கான தோழர்கள் இயக்கத்திலே ஈடுபாடு கொள்ளச் செய்த பகுதி, இந்தப் பகுதியாகும்!

வடசென்னை பகுதி, நாற்றங்கால் பயிரைப் போன்றதாகும்! நாற்றங்கால் பயிர் நட்டு, அரும்பாடு பட்டால் தான் அறுவடையிலே அதிக பலன் கிடைக்கும்! நல்ல விளைச்சல் ஏற்பட வேண்டுமானால் நாற்றங்கால் பயிர் தரமானதாக இருக்க வேண்டும்.

கடந்த பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் பெருமழைக்கும் புயலுக்கு மிடையே இங்கே தான் நமது இயக்கத்தை துவக்கினோம்! இயக்க வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருந்த பகுதி வடசென்னையும், பெத்துநாயக்கன் பேட்டையும் தான்! இந்த இரண்டு பகுதிகள் தான், நாற்றங்கால் பயிர் போல இயக்கத்திற்கு அமைந்திருந்தன! இங்கே இருந்து பல பகுதிகளிலே நடப்பட்டு, இயக்க வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது இந்தப் பகுதி அடிக்கடி நமக்கு அரசியல் அறுவடையின் போது நல்ல பலனை தந்திருக்கிறது!

நல்ல விதைப் பண்ணை போல் இந்தப் பகுதியிலே நல்ல தொண்டர்கள், நல்ல தலைவர்கள் நமக்கு கிடைத்திருக்கிறார்கள். நமக்கு இன்னும் பல நல்லவர்கள் வேண்டும்! ஆகவே நல்லவர்களை தேடிக் கண்டு பிடித்து கழகத்திலே சேர்க்க வேண்டும்! நல்லவர்களை தேடிக் கண்டு பிடிப்பதே ஒரு சிறந்த கலையாகும்! வடசென்னை தோழர்கள் தங்கள் திறமையை அவ்வப்போது காட்டி வருகின்றனர். அவர்களுக்கு மீண்டும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்!

இங்கே கூட்டப்பட்ட காங்கிரஸ் கூட்டத்தில், இயக்கக் கொள்கைகளைப் பற்றி பேசாமல், இயக்கத் தலைவர்களை தாக்கிப் பேசியதாகவும், இழித்தும் பழித்தும் கூறியதாகவும் நண்பர்கள் இங்கே சொல்லி வருத்தப்பட்டார்கள். அவர்களுக்கு நம் கொள்கை தெரியவில்லை — புரியவில்லை! அவர்களுடைய கண்களுக்கு நாம் தான் தெரிகிறோம்! ஆகவே நம்மை ஏசிப் பேசுகிறார்கள்!

வேகமாக வீட்டிற்குள் நுழைகிற போது, வாயிற்படியில் இடித்துக் கொண்டால், 'சனியன் அடித்து விட்டது' என்று கூறுகிறோம்! உண்மையிலேயே வாயிற்படியா இடித்தது? பார்த்துப் போயிருந்தால் இடித்துக் கொள்வோமா? நமக்கு வாய் இருப்பதால் சனியன் இடித்து விட்டது என்கிறோம்.

குழந்தை தத்தி தத்தி வரும் போது, கீழே விழுந்து விட்டால் தாய் என்ன செய்வாள்? அழுகிற குழந்தையை சமாதானப் படுத்த 'உன்னை இந்தத் தரை தானே கீழே தள்ளியது' என்று தரையை ஓங்கி இரண்டு அடி அடித்ததும் குழந்தை சிரிக்கிறது. காமராசர், தரையை ஓங்கி அடிப்பது போல், நம்மை ஏசிப் பேசுகிறார்! விழுந்து விட்ட குழந்தையை, தாய் சமாதானப் படுத்துவது போல் காமராசர், காங்கிரஸ்காரர்களுக்கு கொஞ்சம் சிரிப்பை உண்டாக்க, கூட்டங்கள் போட்டு திராவிட முன்னேற்றக் கழகமா பார்க்கிறேன் ஒரு கை' என்று பேசுகிறார்! இதையெல்லாம் கேட்டு நீங்கள் வருத்தப்படக் கூடாது!

நாம் சொல்லி வருகிற கொள்கை புரிவதற்கு நமக்கே இத்தனை காலம் என்றால் மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு எத்தனை காலம் பிடிக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்! இப்படிக் கூறுவதால் மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு அறிவு குறைவு என்று எண்ணி விடாதீர்கள்!

எதிர் தரப்பிலே இருக்கிற சக்தியை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை! நம்முடைய முழு எண்ணத்தை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை! ஆகவே தான் அவர்கள் நேரத்தையும் காலத்தையும் பாழ்படுத்துகிறார்கள்!

நம் தோழர்களில், எஸ். பி. டி. திராவிட மணியைப் போன்றவர்கள் சொல்லுவதைப் போல் பதிலுக்கு பதில் சொல்லுவதில் பொருளும் இல்லை, பயனும் இல்லை!

அவர்கள் திட்டினால் கூட்டம் கலைந்து விடுகிறது! அவர்கள் பேசிய போது எத்தனை பேர் இருந்தார்கள்? நமது அரிச்சுவடியே கொள்கையில் தான் ஆரம்பமாகிறது! நாம் கூட்டம் போட்டால் உலக விஷயங்கள் அனைத்தையும் பேசுகிறோம்! அகநானூறு பற்றி பேசுகிறோம், தரணி மெச்ச நாம் அன்று வாழ்ந்தோம், இன்று வீழ்ந்து கிடக்கிறோம்! மீண்டும் அந்த வாழ்வை எப்படி பெறுவது, அதற்கு என்ன வழி என்று கூறுகிறோம்! நமது இலட்சியம் நிறைவேறுவதற்கு காரண காரியங்களை விளக்குகிறோம்! பிரச்சனையைப்பற்றி தெளிவாகக் கூறுகிறோம்! நமது கூட்டம் இப்படி முடிந்து விடுகிறது!

12-ம் பக்கம் பார்க்க

இராமாயணமும் மகாபாரதமும் இலக்கிய மரபுக்கே இழுக்கைத் தேடித் தருவதாகும்!

பாரதத்தில் 'பாஞ்சாலி' படைப்பு தமிழர் பண்புக்கே பெரும் களங்கம்!

"பாத்திரப் படைப்பு" பற்றி கவிஞர் கண்ணதாசன் விளக்கம்!

சென்னை மணவழகர் மன்ற சார்பில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில், 3-ம் நாளாகிய 7—2—60-ம் தேதியன்று கவிஞர் கண்ணதாசன் அவர்கள் "பாத்திரபடைப்பு" என்ற தலைப்பில் பேசியது வருமாறு:—

அன்புள்ள தலைமை வகித்துள்ள அம்மையார் அவர்களே! நண்பர்களே! தாய்மார்களே! பெரியோர்களே!

தமிழ்க் கடல் திரு வி. க. அவர்கள் பெயரால் "மணவழகர் மன்றம்" என்ற பெயரால் துவக்கப்பட்டிருக்கும் இம்மன்றத்தின் சார்பில் கடந்த மூன்று தினங்களாக முத்தமிழ் விழாக் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவில் பல அறிஞர்கள் பல கருத்துக்களைப் பேசியிருக்கிறார்கள் எனக்கும், இந்த விழாவில் கலந்து கொள்ளச் செய்து "படைப்பு" என்ற தலைப்பில் பேசும் வாய்ப்பு கொடுத்தமைக்கு நான் நமது நண்பர் கோகுலகிருஷ்ணன் அவர்களுக்கும், இந்த மன்றத்தாருக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் முதல் நாள் விழாவில் கலந்து நல்ல இலக்கிய விருந்தளித்திருக்கிறார். எனக்குமுன் நண்பர் ஹமீது 'இலக்கிய வாழ்வு' என்பது பற்றி உங்கள்முன் பேசினார். எனக்குப் பின் கலைஞர் கருணாநிதி அவர்கள் பேசப் போகிறார்.

நான் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் "படைப்பு" என்ற தலைப்பில் பேச ஆரம்பிக்கிறேன். உலகததை ஆண்டவன் படைத்தான் என்றும், அந்த உலகத்தில் மனிதர்கள் தோன்றினார்கள் என்றும் கூறப்படுகிறது.

மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான் என்று சொல்லப்படுகிறது. மனிதன் முதலில் பேசக் கற்றுக் கொண்டான், படிக்கக் கற்றுக் கொண்டான், எழுதக் கற்றுக் கொண்டான் என்றும் சொல்லபபடுகிறது. மனிதன் வாழ்க்கைக்காக இலக்கியமும் படைக்கப்பட்டது. அந்த இலக்கியத்தின்மூலம் பாத்திரங்கள் படைக்கப்பட்டது. பின் உடம்பிலுள்ள அங்கங்களுக்குப் பெயரிடப்பட்டது. "கை" யென்றும், காலென்றும், மார்பென்றும், துடையென்றும் கூறப்பட்டது. மேலே இருப்பதற்கு வானம் என்றும், கீழே இருப்பதற்குப் பூமி என்றும் பெயரிடப்பட்டது. தண்ணீர் நிரம்பிய இடங்களுக்கு ஏரி என்றும், குளம் என்றும், கிணறு என்றும் கூறப்பட்டது.

இப்படி ஒவ்வொரு விதமாக மனிதர்களைப் பற்றியும், மனிதர்களுக்குத்தேவையானவைகளைப் பற்றியும் கூறப்பட்டு வந்தது.

பெண்களுக்கு உதாரணம் கூறும்போது மென்மையான பொருள்களைக் கொண்டு உதாரணம் கூறப்பட்டுவந்தது. ஆண்களுக்கு வீரத்தைக்கொண்டு உதாரணம் கூறப்பட்டு வந்தது.

நமது இலக்கியங்களில் பெண்களுக்குப் பெருமை தந்தே படைக்கப்பட்டிருக்கிறது.

நமது இலக்கியத்தில் சிலப்பதிகாரத்தைப் படைக்கப்பட்டிருக்கிறது. அதில் கோவலனை பரிதாபத்துக்குரிய நிலையில் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

கோவலனுக்குக் கல்யாணம் நடைபெறுகிறது. அங்கு ஆட்டம் நடக்கிறது, அந்த ஆட்டத்தில் நடனமாட வந்த மாதவியென்ற பெண்ணின் பின்னால் மனைவியை விட்டு விட்டு ஓடுகிறான். அங்கு தகராறு ஏற்பட்டு பின் மனைவியிடம் ஓடி வருகிறான்.

சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்கும் மாதவிக்கும்தான் பெருமை தருகிறார், கோவலனுக்குப் பெருமை தருவதில்லை!

கண்ணகியைக் கற்புடையவளாக இளங்கோ படைத்து மாதவிக்கும் ஒரு பெருமையைத் தந்து கோவலனை பந்துபோல் இங்கு மங்கும் திரியும்படி பாத்திரப்படைப்பு தந்திருக்கிறார்.

கோவலனை வணிகன் என்று கூறப்படுகிறது.

அந்த இலக்கணத்துக்கே மாறுபட்டிருக்கிறான். அவனுக்கு பணத்தைச் செலவு செய்யும் தன்மையைத்தான் காண்கிறோமே ஒழிய சேர்த்து வைக்கும் தன்மையை அங்கு காண முடியவில்லை.

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகள் பொற்கொல்லனை வில்லனாகப் படைத்திருக்கிறார். மற்ற கதைகளில் வரும் வில்லன்களைவிட இந்த வில்லனை அயோக்கியனாகப் படைத்திருக்கிறார்!

கடைசியில் பாண்டியன்மூலம் கோவலன் மரணமடையும்படியும் செய்திருக்கிறார்! சிறப்பாக சிலப்பதிகாரத்தில் கோவலனை ஒரு பரிதாபகரமான உருவமாக அமைத்து, அதில் மாதவிக்கும், கண்ணகிக்கும் பெருமை தரும்படியாக படைக்கப்பட்டிருக்கிறது! அவர்கள் இருவரும் கற்புடையவர்கள் என்று சிலப்பதிகார ஆசிரியரின் எண்ணத்தை கதையில் காட்டப்பட்டிருக்கிறது!

இனி பாரதத்தை எடுத்துக் கொள்வோம்! அதில் பாத்திரப் படைப்பில் தருமனுக்கு பெருமை தருவதற்காக அவனை பொறுமைக்கு உரியவன் என்று காட்டப்படுகிறது! அவனுடைய இளவல் பீமனுக்கு வீரம் காட்டப்படுகிறது! இன்னொரு தம்பியாகிய காண்டீபனுக்கு பெண்களை வேட்டையாடும் தொழிலையே உருவாக்கி பெண்கள்பின் தொடர்புள்ளவனாக ஆக்கப்பட்டிருக்கிறது! பாரதத்தில் வரும் கண்ணன் காண்டீபனுக்கு ஆபத்து வரும்போது அதைச் சரி செய்து பெண்களை ஒன்று சேர்க்கும் வேலைக்கென்றே அவனைப் படைக்கப்பட்டிருக்கிறது.

பாரதத்தில் சகுனி என்று ஒரு படைப்பு வருகிறது. அவனுக்கு சூழ்ச்சி, வஞ்சகம் செய்வதைத் தவிர வேறு எதையும் கற்பிக்கவில்லை, அவனுடைய படைப்பை கவனிக்கும்போது அந்தக் காலத்தில் ராஜதந்திரம் என்பதற்கு சூழ்ச்சி என்பது தான் பொருள் போலும்! பாரதத்தின் முக்கியமான பாத்திரங்கள் ஐவர்! அவர்கள் மூத்தவன் தான் தருமன், அவனை பொறுமையுடையவனாகவும், அவனுடைய தம்பிமார்கள் அவனுக்குக் கட்டுப்பட்டு நடக்கும்படியான நல்ல குணம் படைத்தவர்களென்றும் கதையில் எழுதப்பட்டிருக்கிறது!

தருமன் சகுனியின் சூழ்ச்சியால் சூதாட்டம் ஆடுகிறான். பொன்னும், பொருளும் அரசும் போயிற்று. பின், ஐவர்களையும் வைத்து ஆடுகிறான். அவர்களும் தோற்கிறார்கள் இதையெல்லாம் பார்க்கும் போது பீமனுக்கு கோபம் வருகிறது. அவனுடைய வீரத்தைக் காட்ட துடிக்கிறான், அண்ணனின் பொறுமை தடுக்கிறது. அடிமைகளாக இருக்கிறார்கள். ஒன்றும் செய்ய முடியாது தலைகுனிகின்றனர்—பாரதத்தை எழுதிய ஆசிரியர் அவரது பாத்திரப் படைப்பில் பஞ்சபாண்டவர்களைப் பொறுமை சாலிகளாகவும், அண்ணனுக்கு பணியும் தம்பிகளாகவும் படைத்திருக்கிறார். இதில் எவ்வளவு கேடுகள் இருக்கிறது என்பதை அவர் உணரவில்லை ஆசிரியர் தான் விரும்புவோரை நல்லவர்களாகவும், துரியோதனாதிகளை—சகுனியைக் கெட்டவனாகவும் நினைக்கும்படி எழுத வேண்டுமென்று நினைத்து எழுதியிருக்கிறார். ஆனால், அதில் எவ்வளவு முரணான முறையில் இருக்கிறதென்பதை உணரவில்லை.

இன்னும் பாரதத்தில் பாஞ்சாலி என்ற பாத்திரம் படைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பாத்திரத்தைக் கற்புடையவள் என்று எண்ணும்படி படைக்கப்பட்டிருக்கிறது. அவள் பஞ்சபாண்டவர்களான ஐவர்களின் பத்தினி. அவள் படைப்பு மக்களின் பண்பிற்கே மாறுபட்டிருக்கிறது. தமிழனின் மரபிற்கே இழுக்குண்டாகும் நிலையில் இருக்கிறது, தர்மன் சூதாட்டத்தில் தோற்ற பின் பாஞ்சாலியையும் பணயம் வைக்கிறான். இதைத் தடுக்க வேண்டுமென்று தம்பி மார்களுக்கு ஆர்வம் ஆனால், அதிலும் வீரனென சொல்லப்படும் பீமனுக்கு துடிக்கிறது. ஆனால், அண்ணனின் சொல்படி நடக்கவேண்டுமென்ற பாத்திரப் படைப்புப்படி தயங்குகிறான். பாஞ்சாலியை வைத்துச் சூதாடியதிலும் பஞ்சபாண்டவர்கள் தோற்கிறார்கள். துரியோதனாதிகள் பாஞ்சாலியைத் துயிலுரிய முயற்படுகையில் பாஞ்சாலி பேசுவதாக ஆசிரியர் எழுதுகிறார். வீரர்களான ஐவர்களுக்கும் உதிக்காத விஷயம் பஞ்சாலிக்கு உதித்திருக்கிறது.

அவள் கேட்கிறாள் "என்னைப் பணயம் வைக்க பஞ்சபாண்டவர்களுக்கு உரிமை இல்லை. அவர்கள் உங்களுக்கு அடிமையாகி விட்டார்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

சுடுகாட்டுச் சாம்பல்

பி. எஸ். இளங்கோ

அத்தியாயம் 30

ரங்கநாயகியும், சுந்தரமும் என்னதான் கணவன் மனைவியைப்போல் வாழ்ந்து வந்தாலும் பாண்டியன்மீது கொண்டுள்ள மோகம் மட்டும் ரங்கநாயகிக்குத் தணியவே இல்லை! சுந்தரமும் அப்படித்தான் இருந்தான்!

கொஞ்சுவதும், குலாவுவதும் உடற் பசியைத் தணிக்குமே தவிர உள்ளத்தின் பசியை எப்படித் தணிக்க முடியும்? இருவருடைய உள்ளத்திலும் இந்த எண்ணம்தான் அரும்பி இருந்தது!

"வேல்விழியைத் தீர்த்துக் கட்டி விட்டால் பாண்டியன் நமக்குச் சொந்தமாகி விடுவானே" என்று ரங்கநாயகி எண்ணினுள்!

அதேபோல் "பாண்டியனைத் தொலைத்து விட்டால் வேல்விழி நமக்குச், சொந்தமாகி விடுவாளே" என்று சுந்தரமும் யோசிக்கத் தலைப்பட்டான்!

தூங்குவதுபோல் தூங்கிக் கொண்டிருந்த இருவரும் கடிகாரம் ஒலிக்கும் ஓசைக்காக காத்துக் கொண்டிருந்தார்கள்!

"அப்பாவி நன்ருகத் தூங்கிக் கொண்டிருக்கிருன், மணி பன்னிரெண்டு அடித்தவுடன் கிளம்பி விட வேண்டியதுதான்" என்று ரங்கநாயகி மனதிற்குள்ளேயே யோசித்துக் கொண்டிருந்தாள்!

"திமிர் பிடித்தவள் நன்ருகத் தூங்குகிருள், தூங்கட்டும். தூங்கிக் கொண்டே இருக்கட்டும்! விடிந்ததும் என்னை எண்ணி எண்ணி ஏங்கட்டும்" என்று மனதிற்குள்ளேயே சுந்தரமும் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தான்!

மணி பன்னிரெண்டு அடித்தது! சுந்தரம் ஓசைபடாமல் எழுந்தான்! மெல்ல மெல்ல நடந்தான், தாளிட்டிருந்த கதவைத் திறந்தான்! ரங்கநாயகி திடுக்கிட்டாள்! "இந்தப் பயல் இன்னமுமா தூங்கவில்லை! பாவி எங்கே செல்லுகிருனே! எங்கேயாவது ஒழியட்டும், நமக்கு பாண்டியன் கிடைத்தால் போதும்" என்று எண்ணி குறட்டை விட்டுக் காட்டினுள்!

சுந்தரத்திற்கு ஒரே மகிழ்ச்சி! "குறட்டை விடுகிருள் — ஆம் நம்மை கோட்டை விடுகிருள்" என்று அவனுடைய மனம் துள்ளிக் குதித்தது! பளபளக்கும் பட்டாக் கத்தியை இடுப்பில் சொருகிக் கொண்டு பாண்டியன் இருக்குமிடத்தை நோக்கி வேக வேகமாக நடக்கலானுன்!

ரங்கநாயகி பெண்தான்! என்ருலும் பாசம், நேசம் அவளை ஆணுகவே மாற்றி விட்டது! ஆணுக மாற்றிவிட்டது! மட்டுமல்ல ஆணுடையையும் உடுத்திக் கொண்டாள்! ஒரு பெரிய வாளையும் தூக்கிக் கொண்டு வேல்விழியை கொலை செய்யப் புறப்பட்டாள்.

உலகம் கும்மிருட்டுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. நட்சத்திரங்கள் மட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாக மின்னிக் கொண்டிருந்தன.

பாதை சரியாக தெரியாத காரணத்தால் விடி நிலவு வந்ததும் கிளம்பலாம் என எண்ணி ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டான். என்னதான் ஆண்பிள்ளையாக இருந்தாலும் சுந்தரத்தின் நெஞ்சு மட்டும் படக் படக் என்று அடித்துக் கொண்டுதான் இருந்தது. அதற்கேற்றது போல் ஒரு உருவம் வருவதைப்போல் அவனுக்கு ஒரு பிரமை உண்டாயிற்று! அவன் எண்ணியது வெறும் பிரமையல்ல! உண்மையில் ஒரு பெரியவர் அந்த வழியிலேயே வந்துக்கொண்டிருந்தார்.

"யாரது?" திகிலோடு சுந்தரம் கேட்டான்.

"யாரது? யாரது" சுந்தரம் மீண்டும், மீண்டும் கேட்டான்!

வந்த அந்தப் பெரியவர் 'நான் ஒரு ஒற்றன், நீ யார்?' என்று கேட்டார்!

சுந்தரத்தின் உடல் குபீரென்று வியர்த்தது. அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"நீ யார்? இந்த நேரத்தில் இங்கு வரக் காரணம் என்ன?" பெரியவர் கேட்டார்!

சுந்தரம் மௌனம் சாதித்தான்.

"சொல்லுகிருயா? இல்லை, உன்னைக் கைது செய்யட்டுமா?" பெரியவரின் குரல் அவனுக்கு அச்சத்தை ஊட்டியது!

"நான், வேலம்பட்டி மிராசுதாரரின் மகன்! வீட்டில் கோபித்துக்கொண்டு ஓடி வந்துவிட்டேன்! உங்கள் நாட்டில் ஏதாவது உத்தியோகம் கிடைக்குமா?" என்ருன் சுந்தரம்!

"உனக்கு என்ன வேலை தெரியும்?" என்று கேட்டார் அந்தப் பெரியவர்.

'எல்லா வேலைகளும் தெரியும்' என்ருன் சுந்தரம்!

'கார் ஓட்டத் தெரியுமா?' என்று கேட்டார் அந்தப் பெரியவர்.

"ஓ, தெரியுமே" என்ருன் சுந்தரம்.

"அப்படியானுல் எங்கள் நாட்டு அமைச்சர் பாண்டியனுடைய மனைவி வேல்விழிக்கு கார் ஓட்டுகிருயா?" என்று கேட்டார் அந்தப் பெரியவர்.

"பாண்டியனுடைய மனைவி! இந்த சுந்தரம் தொட்டுத் தாலி கட்டியவள் பாண்டியனுடைய மனைவி" ஆத்திரம் அவன் உள்ளத்தில் பொங்கி எழுந்தது. என்ன செய்ய முடியும்! சரி என்று ஒப்புக்கொண்டான்.

'எங்கள்சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு நடக்க வேண்டும், நாங்கள் என்ன கட்டளை இட்டாலும் அதை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டும். இல்லையேல் உன்னுடைய கண்கள் இரண்டையும் சூட்டுக் கோலால் சுட்டு விடுவோம்! இதற்குச் சம்மதமா?" என்ருர் அந்தப் பெரியவர்!

"உங்களுக்கு நான் அடிமை! எதையும் செய்யத் தயார்!" என்ருன் சுந்தரம்!

"சரி! அப்படியானுல் என் கூடவா" என்று அந்தப் பெரியவர் சுந்தரத்தின் கண்களை துணியால் இறுக்கிக் கட்டி கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு சென்ருர்.

இதையெல்லாம் ஒளிந்து கேட்டுக் கொண்டிருந்த ரங்கநாயகியும் அவர்களைப் பின் தொடர ஆரம்பித்தாள்.

அத்தியாயம் 31

கர்னல் தாமசின் அவசர டெலிபோன் அழைப்புக்கிணங்க எல்லா இராணுவ அதிகாரிகளும், முக்கிய இராணுவ வீரர்களும் பிரதம இராணுவ காரியாலயத்திற்கு வந்து சேர்ந்தனர். வெளியிலும் உள்ளேயும் பலத்த பந்தோபஸ்து செய்யப்பட்டிருந்தது.

ஒரு ரகசியமான அறையில் எல்லோரும் ஒன்று கூடினர்!

கர்னல் தாமஸ் எழுந்து "என்னைப் பற்றி நீங்களெல்லோரும் என்ன நினைக்கிறீர்கள்" என்று கேட்டார்.

"ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்? என்றுமே கேட்காத இந்த கேள்வியை எப்படிக் கேட்கத் துணிந்தீர்கள்" என்று எல்லா இராணுவ அதிகாரிகளும் ஒரு மிக்கக் கேட்டனர்.

"தவருக நினைக்காதீர்கள்! தயவு செய்து நான் கேட்கும் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள்" என்ருர் கர்னல் தாமஸ்.

"உத்தமர், உயர் குணம் படைத்தவர், தனக்கென வாழாதவர், அனைவரையும் உற்ருர், உறவினர்களாய் பாவிப்பவர்" என்பது தான் எங்களுடைய உண்மையான கருத்தாகும்!

"இது உண்மைதானே?"

"அதில் துளியும் சந்தேகம் வேண்டாம்"

"அப்படியானல்.....?"

"தயங்காமல் சொல்லுங்கள்" எங்கள் உடல், பொருள், ஆவி அத்தனையையும் கேட்டாலும், தரக் காத்திருக்கிறோம்.

"இது மூன்றும் தான் தேவை! எனக்கல்ல, நாட்டிற்கு! கர்னல் தாமஸ் கண் கலங்கக் கூறினர்.

எல்லா இராணுவ அதிகாரிகளும் எழுந்து மரியாதையாக நின்று, "என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்" என்றனர்.

'தோழர்களே! உங்களை முதன் முறையாக இப்படி அழைக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன். நான் இராணுவத்தில் சேர்ந்தது பணத்திற்காகவோ, புகழுக்காகவோ, அதிகாரத்திற்காகவோ அல்ல! தாய் நாடு நாம் பிறந்த பொன்னாடு அந்நியர்களிடம் சிக்கித் தவிப்பதைக்கண்டு தினம் தினம் மனம் புண்ணடைந்து "சொந்த நாடு விடுதலையடையாதா" என்று ஏங்கிக் கிடந்தேன்! அதற்காக எத்தனையோ தியாகங்களை செய்தேன்! கொடுமைகளை அனுபவித்திருக்கிறேன்! சிறைக் கூடத்தில் வாடி இருக்கிறேன். எல்லாம் விழலுக்குப் பாய்ச்சிய நீராகவே முடிந்தது! முடிவில் அதிகாரத்தைக் கைப் பற்றினல் தான் நாட்டை விடுவிக்க முடியும் என்றும் எண்ணினேன்! அந்த ஆசையின் காரணமாகத்தான் நான் இராணுவத்திலும் சேர்ந்தேன்!

இராணுவத்தில் சேர்ந்து, சலியாது உழைத்து பெரும் பதவியையும் பெற்று விட்டேன்! ஆனல் என்னுடைய எண்ணம் மட்டும் இன்னும் ஈடேறவில்லை'

"உங்கள் எண்ணத்தை நாங்கள் ஈடேற்றித் தருகிரோம். எங்களுக்கு மட்டும் நாட்டுப் பற்றில்லையா?" என்று எல்லோருமே ஏகோபித்துக் கூறினர்!

"அப்படியானல் இந்த ஆட்சியை நாம் உடனடியாகக் கைப் பற்றியாக வேண்டும் அதற்குத் தயாரா"?

'தயார்! தயார்!' எல்லா இராணுவ வீரர்களும் கூறினர்!

'எப்போது செய்வது, எப்படி செய்வது என்ற யோசனையை கூறுங்கள்' என்ருர் கர்னல் தாமஸ்!'

'இன்றே செய்யலாமா?' என்றனர் இராணுவ வீரர்கள்!

'வேண்டாம், இந்த அறிக்கையை எல்லா இராணுவ வீரர்களுக்கும் சமர்ப்பித்து, நம்மிடையே ஒரு பெரும் கட்டுப்பாட்டை உண்டாக்கிக் கொண்டு செய்வோம்!' என்ருர் கர்னல்!

அந்த நாள் எந்த நாள் என்பதையும் நீங்களே குறிப்பிட்டு விடுங்கள்!

'மார்ச்சு மாதம் 6ம் தேதி ஞாயிற்றுக் கிழமை, ஞாயிறு கிளம்புகிற நேரத்தில் இந்த நாட்டின் சுதந்திரமும் உதயமாக வேண்டும்! சரிதானே' என்ருர் கர்னல் தாமஸ்!

வாழ்க கர்னல் தாமஸ்!
ஒழிக அடிமைத்தனம்!
எல்லா இராணுவ வீரர்களும் இந்த களிப் பொலியோடு கலைந்தனர்!

(தொடரும்)

குடந்தையில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக வீரர்களின் கொள்கை முழக்கம்!

கோவை செழியன் தலைமை வகித்தார்!

மாணவி சற்குணம் மாநாட்டை திறந்து வைத்தார்!!

தஞ்சை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முதல் மாநாட்டுத் தலைவர் திறப்பாளர், மாணவர் பொதுச் செயலாளர் மற்றும் மாணவ முன்னணி வீரர்கள் பலரும் பிப்ரவரி 14-ந் தேதி அன்று காலை 8 மணியிலிருந்தே பலர் குடந்தை கே. கே நீலமேகம் அவர்கள் இல்லத்தில் வந்து தங்கினர்கள் அனைவரும் ஊர்வலத்தில் கலந்து கொண்டு மாநாட்டுத் திடலைவந்து அடைந்ததும் மாநாட்டு நிகழ்ச்சிகள் துவங்கப்பட்டது!

குடந்தை அரண்மனைத்தோட்டம் பேராசிரியர் இருதயராஜ் பந்தலில், நாவலர் சோமசுந்தர பாரதியார் அரங்கில் சரியாகக் காலை 11 மணியளவில் மாநாட்டு நிகழ்ச்சிகள் துவங்கப்பட்டது. நாட்டுப் பண்பாடி முடிந்ததும் வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் ப. வ. செழியன் பி. ஏ (ஆனர்ஸ்) அவர்கள், மாநாட்டுத் திறப்பாளர் தலைவர் மாணவர் பொதுச் செயலாளர், மாணவ நண்பர்கள், கழகத் தோழர்கள் அனைவரையும் வரவேற்று மாநாட்டினைத் திறந்து வைக்கும் படித் தோழியர் எஸ். பி சற்குணம் அவர்களைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க தோழியர் எஸ். பி சற்குணம் அவர்கள் மாநாட்டினைத் திறந்து வைத்துச் சிறிது நேரம் சொற்பொழிவாற்றினர்கள். அடுத்து கோவை செழியன் அவர்களைத் தலைமை தாங்கி மாநாட்டினை நடத்தித் தரும்படித் தோழர் இராசேந்திரன் அவர்கள் முன் மொழிந்து பேசினர்கள். தொடர்ந்து தோழர்கள் கே. ஏ. கிருட்டிணசாமி, சேலம் க. இராசாராம், கரந்தை கணேசன், கருணாநிதி மலையப்பன், காசி சம்பந்தம் தமிழ ஒளி பி. பாலசுப்பிரமணியம், பூவை. நா. இராமனுஜம் எம்.எஸ வெங்கடாசலம் தோழியர் சரோசா (குடந்தை கே.கே. நீலமேகம் அவர்களின் புதல்வி) மதுரை வே. சுந்தராசன், டி கே. பொன்னுவேலு, ஆகியோர் வழிமொழிந்து பேசியதும் பலத்த கையொலிகளுக்கிடையே கோவை. செழியன் பி ஏ, அவர்கள் மாநாட்டுக்குத் தலைமைதாங்கினர்கள். குடந்தை நகர தி மு. க. செயலாளர் தோழர் பத்மநாபன் அவர்கள் தி. மு. கழகத்தின் சார்பில் மாநாட்டுத் தலைவர் திறப்பாளர் மாணவர் பொதுச் செயலாளர், வ கு. தலைவர் ஆகியோருக்குக் கைத்தறி ஆடைகளை அணிவித்தார். தொடர்ந்து பல மாணவர் அமைப்புகளின் சார்பிலும் கிளை கழகங்கள் துணையமைப்புகளின் சார்பில் தலைவர் அவர்களுக்கு, மாணவர் பொதுச்செயலாளர் அவர்களுக்கும் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டது தஞ்சை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் அனைவருக்கும் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டது. பின்னர் மாநாட்டுத் தலைவர் கோவை செழியன் அவர்கள் தலைமைத் தாங்கி மாணவர்களின் கடமைகள் குறித்தும் இலட்சிய திராவிடத்தை அடைவதற்காக மாணவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் குறித்தும் அரசியல் ஈடுபாடு குறித்து மாணவர்கள் பங்கு என்ன என்பதை அறிஞர் அண்ணு அவர்களின் கருத்துக்களை வலியுறுத்தி, அறிஞர் அண்ணு அவர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் நற்பெயர் வாங்கித் தரத்தக்க விதத்தில் மாணவர்கள் தாங்கள் மேற்கொண்டுள்ள கல்வி ஈடுபாட்டில் முன்னேற்றம் காண வேண்டும் என்பதை வலியுறுத்தும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்கள்.

அடுத்து சங்க காலத்தில் தமிழர் பண்பாடு' என்பது குறித்து தோழர் கரந்தை கணேசன் அவர்களும் அரசியலும் மாணவர்களும் என்பது குறித்து தோழர் ஜே. எஸ், ராசு (பி ஏ) அவர்களும் பேசிய பின்னர் மாநாடு பகல் உணவுக்காக நண்பகல் 1-15 மணிக்கு முடிவுற்றது!

மீண்டும் மாநாடு பிற்பகல் 3-30 மணிக்கு துவங்கியதும் 'அரசியலும் வரலாறும்' என்பது குறித்து ராசகுமார் பீட்டர் பி ஏ., (ஆனர்ஸ்). வீரம் என்ற தலைப்பில் தமிழ்ச் செல்வன் அவர்களும் மற்றும் திருமாறன், எம்.ஜி ராமச்சந்திரன், அன்வர் (பி,ஏ.) திராவிடமணி (பி.ஏ.) க. இராசேந்திரன், (பி ஏஸ்.சி.) கோ. கிருட்டிணன், (பி ஏ.) வி கிருட்டிண மூர்த்தி. எம் ஏ, (பி. எல்.), காசிம், (பி. ஏ.) சுல்தான், பி.ஏ., (எம்.சி.), பெரியசாமி, 'திராவிடம் அன்றும் இன்றும்' என்ற தலைப்பில் கரு. கதிரவன், 'ஆளும் கட்சியும் மாணவர்களும்' என்ற தலைப்பில் ச பெ. மலைச்சாமி, (பி.ஏ,) ஆனர்ஸ், 'இலக்கியம்' என்ற தலைப்பில் வேங்கடபதி, எம்.ஏ, 'சரித்திரம் பேசினல்' என்பது குறித்து ஈ. கிருட்டிணன், (பி. எஸ். சி.) 'நாட்டுப் பிரிவினையும் சட்டப் பிரச்சினையும்' என்ற தலைப்பில் வழக்கறிஞர் ப. மாணிக்கவாசகம், (பி.ஏ., பி.எல்.) 'நாட்டுப் பிரிவினையில் நமது பங்கு' என்ற தலைப்பில் சீர்காழி சோமசுந்தரம், (பி. ஏ.), ஜனநாயகம்' என்ற தலைப்பில் டி. கே கோபால கிருட்டிணன், (எம்.ஏ). 'விடுதலை எழுச்சி' என்ற தலைப்பில இரா. இளந்திரையன் 'மக்களாட்சி' என்ற தலைப்பில் மதுரை வே. சவுந்தரராசன், (பி ஏ, பி எல்.) ஆகியோர் பேசிய பின்னர் தோழர் மகிழேந்திரன் அவர்கள் இயற்றிய 'அண்ணு உலா' அறிவொளி அவர்களால் அரங்கேற்றப்பட்டது! அடுத்து வேங்கடபதி அவர்களும் அண்ணு உலா' ஒன்றினை அரங்கேற்றினர்! பின்னர் பதின்மூன்று முக்கிய தீர்மானங்கள் பலத்த கையொலிக்கிடையே நிறைவேற்றப்பட்டது அடுத்து மாணவர்கள் கிளர்ச்சி' என்பது குறித்து கே, ஏ. கிருட்டிணசாமி, (பி.ஏ. ஆனர்ஸ்) 'திராவிடம் பிரிந்தால் வாழுமா' என்ற தலைப்பில் உ. பில்லப்பன் (எம்.ஏ) 'புரட்சியின் தத்துவம்' என்ற தலைப்பில் என். வி என். சோமு (பி ஏ.) 'தொழில் வளம்' என்ற தலைப்பில் பூ வ. நா. இராமானுசம் 'அரசியல் தத்துவம்' என்ற தலைப்பில சேலம் க. இராசாராம் பி ஏ. 'பாராளு மன்றத்தில் மந்திரிகள்' என்ற தலைப்பில் டி. கே. பொன்னுவேலு (பி,ஏ,) ஆகியோரும் பேசினர்! இந்திய கலாச்சாரத்தில் திராவிடர் நாகரீகம என்ற தலைப்பில் அ. கதிரொளி (பி.ஏ.) (ஆனர்ஸ்) அவர்களும் 'பல்கலைக் கழகத்தில் போதனுமுறை' என்ற தலைப்பில் தோழர் எம். எஸ், வெங்கடாசலம் எம்.ஏ. (ஹோம் லாண்ட் துணையாசிரியர்) அவர்களும் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினர்கள்! இறுதியாகத் தலைவர் முடிவுரைக்குப் பிறகு தோழர் இராசேந்திரன் அவர்கள் வரவேற்புக் குழுவின் சார்பில் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

—தி. சு. கிள்ளிவளவன்

விரைவில்! மிக விரைவில்!
மாலை மணி
தின இதழாக வெளிவரும்

கருத்துள்ள கதைகளையே கதாசிரியர்கள் உருவாக்க வேண்டும்!

(கண்ணதாசன் பேச்சு)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அடிமையானவர்கள் இன்னொருவரை அடிமையாக்க முடியாது என்று கூறுகிறாள். அவள் வார்த்தையை ஏற்கவில்லை அவளையும் அடிமையாக்கப்பட்டது.

இந்த பாரதப் பாத்திரப் படைப்பில் பல ஓட்டைகள், இலக்கிய மரபுக்கு மாறான முறையில் இருக்கிறது. இந்த பாரதத்தைத் தான் நமது இலக்கியம் என்றும் கூறுகிறோம்.

அடுத்து இன்னொரு இலக்கியமாகிய இராமாயணத்தைப் பார்ப்போம் இதிலுள்ள பாத்திரங்களின் படைப்பைக் கவனிப்போம். இதில் கம்பர் இராமர் மீது ஆசை கொள்கிறார்! அவரை மக்கள் போற்றும் வண்ணம் செய்ய வேண்டுமென்று எண்ணுகிறார். அதன்படி ராமருக்கு உயர்வு கொடுக்கிறார்! கம்பனுடைய எண்ணப்படியே மக்களும் ராமனுக்கு பெருமை அளிக்கிறார்!

இராமாயணத்தில் கம்பர் ராவணனைப் படைக்கிறார்! அவனுக்குப் பெருமை தருகிறார்! நல்ல குணங்கள் உடையவரென்றும் கூறுகிறார். ஆனால் போரில் தோற்றான் என்று எழுதியிருக்கிறார். இதில் மாறுபாடிருப்பதை கம்பன் கவனிக்கவில்லை. தனக்குப் பிரியமான ராமனுக்குச் சிறப்பைத் தர வேண்டுமென்று நினைக்கிறாரே தவிர தான் முன்பு எழுதியதற்கு மாறுபட்டிருக்கிறதென்பதை உணரவில்லை. வீரனாக வர்ணிக்கப்பட்ட ராவணன் ராமனிடம் தோற்றான் என்று கூற வேண்டுமென்ற கம்பனின் ஆசையை ராமாயணத்தில் படைத்திருக்கிறார்! இங்கே தான் கம்பனின் நிலை மிகவும் பரிதாபமாக இருக்கிறது!

கம்பன் கைகேயி பாத்திரத்தைப் படைத்து அவளைப் பற்றி எழுதும் போது முன்னுக்குப் பின் முரணாக எழுதுகிறார்.

பரதன் பாட்டன் வீட்டுக்குப் போயிருக்கிறான். அந்த நேரத்தில் ராமனுக்கு மகுடம் சூட்டுவதென்று தசரதன் முடிவு செய்கிறான். இதைக் கேட்ட கைகேயி மகிழ்கிறாள்! ஆனந்தப்படுகிறாள்!

ராமனின் மகுடம் சூட்டும் ஆவல் கொள்கிறாள்! விழாவைக் காண்கிறாள்! ஆனால் இந்த நேரத்தில் மந்தரை சூழ்ச்சி செய்கிறாள். அவள் சூழ்ச்சிக்கு கைகேயி இணங்கி ராமனை காட்டுக்கனுப்புகிறாள். ராமனுக்கு விரோதியாகிறாள். முன் அத்தியாயத்தில் அவளை நல்லவளாகப் படைத்து பின்னால் அவளைக் கெட்டவளாக்குகிறார். கம்பருக்கு ராமன் மீது இருக்கும் பிரியத்தில் எழுதுவதில் மாறுபாடு காணமுடியவில்லை. இந்த இடத்திலும் கம்பர் நிலை மிக மிக மோசமாகி விட்டது,

கம்பர் தனது இராமாயணத்தில் அனுமார் என்ற பாத்திரத்தைப் படைக்கிறார். அவனை ராமரின் தூதனாகப் படைத்திருக்கிறார். அவனது போக்கைப்பார்க்கும் போது அனுமானுக்கு தூதனுக்கு இருக்க வேண்டிய எந்த யோக்கியதையும் கிடையாது. ஒற்றன் என்று சொல்வதானால் அதுவும் சொல்ல முடியாது. ஒற்றன் என்றால் ரகசியமாகப் போய் காரியங்களைப் பார்ப்பவனுக்குத் தான் ஒற்றன் என்று பெயர். அனுமார் செய்த காரியங்களிலிருந்து அவனை அந்த மாதிரியும் கூற முடியாது.

அனுமான் இலங்கையில் நடந்து கொண்ட முறை, அவன் செய்த அட்டகாசங்கள், பண்பிழந்த செய்கைகள் இவைகளை நோக்கும் போது, அவனை நாகரீகமற்றவனாகத் தான் நினைக்க வேண்டும். அரச சபையில் அவன் நடந்து கொண்ட முறை அரசனை அவமதித்த முறை இவைகள் சரியாக இல்லை. அனுமானை வீரனாக்க வேண்டுமென்ற நினைப்பில் கம்பன் அனுமானின் செய்கையை மோசமாக்கி விட்டான்.

அனுமான் அப்படி மோசமாக நடந்தும் "அனுமானைக் கொல்லாமல் கொண்டுவா" என்று பண்போடு கூறியதாக கம்பர் எழுதியிருக்கிறார். மற்றும் ராவணின் தம்பியாகிய விபூஷணனை அவனுக்கு விரோதமானவனாக்கி, ராமனுக்குத் துணைவனாகப் படைக்கிறான். கம்பன் ராமனை நல்லவனாக்க பொருந்தாத விஷயங்களையெல்லாம் பாத்திரங்கள் மூலம் திணிக்கிறார்.

கம்பர் ராவணன் மனைவியைப் பற்றி எழுதும் போது பண்புடையவள். பத்தினி, கணவனையே தெய்வமாக மதிப்பவள் என்றெல்லாம் எழுதி விட்டு, அதே மண்டோதரியைப் பற்றி எழுதுவதைப் பார்த்தால் கம்பனின் பாத்திரப் படைப்பிலிருக்கும் கோளாறுகளைப் பார்க்கலாம்.

ராவணன் பிணமாக இருக்கிறான். அவன் பிணத்தை மடியில் மண்டோதரி படுக்க வைத்துக் கொண்டு அழுகிறாள். ராவணனின் மார்பில் அம்பு துளைத்திருக்கிறது அதைப் பார்த்து மண்டோதரி புலம்பி அழுவதாக கம்பர் எழுதுகிறார். "ஜானகியின் ஆசை நெஞ்சில் பதிந்திருப்பதை போக்கவே ராமன் அம்பு நெஞ்சில் பாய்ந்திருக்கிறது" என்று. இது பொருந்துமா? "கணவனை கண் கண்ட தெய்வமென மதிப்பவள் மண்டோதரி என்று முதலாவதாக எழுதி விட்டு பின்னால் அதற்கு முரணாக எழுதுகிறார் ராமனை புகழ்வதற்காக ராவணின் மனைவி வாயால் ராவணனை கெட்டவனென்று கூறும் படி எழுதுகிறார்.' இதையெல்லாம் மக்கள் நம்ப முடியாது.

கணவன் பிணத்தை மடியில் வைத்துப் புலம்புபவள், கற்புக்கரசியாக விளங்குபவள் ஒரு போதும் மாண்டிருக்கும் கணவனைப் பார்த்து அவ்வாறு கூற மாட்டாள், இம்மாதிரி பாத்திரப் படைப்பு தருவது மக்களை ஏய்ப்பதற்கு.

இதே போன்றுதான் நளாயினியின் கதையும் அதில் மன்னனின் செய்ய முடியாத செயல்களைச் செய்ததாக எழுதி, நமது சந்ததிகள் நம்ப முடியாத படி பாத்திரப் படைப்பு தரப்படுகிறது.

பாத்திரப் படைப்பு என்பது ஆசிரியன் எண்ணத்தை மட்டும் பிரதிபலிக்காது அதைப் படிக்கும் மக்களும் என்ன நினைப்பார்கள் என்று எண்ணி அமைக்க வேண்டும்!

என்னிடம் மராட்டிய கதாசிரியர் காட்கரி என்பவரால் எழுதப்பட்ட கதை ஒன்று கொடுக்கப்பட்டது! அதைப் படித்தேன். அப்படியே கதையில் லயித்துப் போனேன் அப்படி எழுதப்பட்ட கதையை இங்கு படமெடுத்தவர்கள் கருத்தையே கெடுத்து; அதை குட்டிச் சுவராக்கி விட்டார்கள் அந்த படம் தான் "மகாதேவி" என்ற படம் காட்காரி எழுதிய கதையில் வசந்தரா என்ற ஒரு அழகியைப் படைத்து அந்த அழகியின் மீது அந்த நாட்டு அரசன் ஆசை கொண்டு கற்பழிக்க முயன்று அவள் தன் கற்பை காக்க, தற்காப்பு நடவடிக்கைகள் எடுத்து தப்புகிறாள். பின்னர் அந்த காமவெறி பிடித்த அரசன் அவளையும் அவள் கணவனையும் சிறையிலடைக்கிறான்! அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை இருக்கிறது. அந்தக் குழந்தையை பெற்றவளிடம் காட்டி என்னுடைய ஆசையை நிறைவேற்றுகிறாயா அல்லது உன் கண் முன்னாலேயே குழந்தையைக் கொன்று விடவா என்று கேட்கிறான்.

அதற்கு வசந்தாரா அரசனிடம் "உன் விருப்பப்படி செய்" குழந்தைக்காக நான் உயிர் வாழ்கிறேன் அந்தக் குழந்தை இறந்த பின் என் பிணத்தோடு இன்பம் அனுபவி" என்று கூறிவிடுகிறாள்.

அதே போன்று அவள் கணவனிடம் அரசன் போய் கேட்கிறான் "உன் மனைவியை என் விருப்பத்திற்கு இணங்கச் செய் இன்றேல் உன் குழந்தையை உங்கள் கண் முன்னே கொல்வேன்" என்று ஆவேசத்தோடு கேட்கிறான்

அதற்கு அவள் கணவன். "என் மனைவி உன் விருப்பத்திற்கு இணங்குவது அவள் பிரியம்.

என்னிடம் அது பற்றி கேட்பது சரியல்ல விருப்பப்படி செய்து கொள்" என்று கூறுகிறான். குழந்தையைக் கொல்வது என்ற முடிவுக்கு வருகிறான் அரசன். இதை அரசனின் மனைவி மறைந்திருந்து கேட்கிறாள். வசந்தராவின் குழந்தை கட்டிலில் படுத்திருக்கிறது, அரசன் கொல்லப்போகும் நேரம் வருகிறது, அரசனின் மனைவி தன் குழந்தையை அந்தக் கட்டிலில் படுக்க வைத்து விட்டு, வசந்தராவின் குழந்தை எடுத்துக் கொண்டு போய் விடுகிறாள்! தன் குழந்தையைக் கொல்லுகிறான் அரசன். அந்த நேரம் அவன் முகம் மாறுகிறது. இப்படி எழுதப்பட்ட கதையை— அருமையாகக் படைக்கப்பட்ட பாத்திரங்கள் நிறைந்த கதையைத் தான் "மகாதேவி" என்று பெயர் வைத்து கருத்தையே குட்டிச் சுவராக்கி எடுக்கப்பட்டது.

அதில் நான் வேறு ஒன்றும் செய்ய முடியாது. காட்காரி எழுதிய கதையை மனதில் வைத்து "புறப்படு மகனே புறப்படு மகனே" என்ற பாடலைப் புனைந்தேன்.

இந்த மாதிரியாக மராட்டிய கதாசிரியர்கள் பலர் கை நடுங்கும் விதத்தில் நல்ல கதைகளை எழுதி, மக்களுக்கு வீர உணர்ச்சி வரும்படியாகவும், பாத்திரம் படைப்பதில் மிகவும் திறமையாவும் எழுதுகிறார்கள்.

இங்கும் கதை எழுதுகிறார்கள். அதுவும் எப்படி கதை எழுதுகிறார்கள். முழுதும் கதை எழுதுவதில்லை.

ஒவ்வொரு சீன் எடுக்க எடுக்க கதையை எழுதுவது இப்படி இந்த நாட்டில் கதாசிரியர்கள் இருக்கிறார்கள். இப்போது எழுதும் காதல் கட்டங்களைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. ரோட்டில் காதலி நடந்து போவாள். திடீரென்று ஆபத்து வரும், எதிர்பாராது காதலன் வருவான், காப்பாற்றுவான். காதல் வளரும். பூங்காவில் ஆடி, ஓடி விளையாடுவார்கள். அதுவல்லாது காதலுக்கு இடையூறு வரும், கடவுள்கள் தோன்றி காப்பாற்றுவார்கள். இந்த மாதிரியான கதைகளைத்தான் இப்போது படம் எடுக்கிறார்கள். பாத்திரம் படைப்பதிலோ மிகவும் மட்டமாகப் படைப்பார்கள். நமது அறிஞர் அண்ணா அவர்கள் 'வேலைக்காரி' படத்தை எழுதினார். அதில் பாத்திரப் படைப்பு அருமையாகப் படைத்திருக்கிறார். மணியென்ற ஒரு பாத்திரம் வருகிறது. தந்தை தற்கொலை செய்து பிணமாகத் தொங்குவதைக் கண்ட ஆனந்தன் ஆத்திரப்படுகிறான், சீறி எழுகிறான், தந்தை மரணத்திற்குக் காரணமான வேதாசல முதலியாரைப் பழிக்குப் பழி வாங்க எண்ணுகிறான். ஆனந்தனின் நண்பன் மணி வருகிறான்; ஆனந்தனின் ஆத்திரத்தையும், ஆவேசத்தையும் அடக்கி வேதாசல முதலியாரை உடனடியாக பழி தீர்த்துக் கொள்வதைவிட அவர் செய்த கொடுமைகளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக அணு அணுவாக வஞ்சம் தீர்த்து, வேதாசல முதலியாருக்குப் புத்தி புகட்ட வேண்டுமெனக் கூறி ஆனந்தனைச் சாந்தப்படுத்துகிறான் மணி.

(12-ம் பக்கம் பார்க்க)

நாடகக்கலை-திரைப்படத்திற்கு ஈடாக வளர்ச்சி பெற்றுவருகிறது!

மறுமலர்ச்சி நாடகங்களுக்கு வழி காட்டியவர் அறிஞர் அண்ணா!

சென்னை, கோக்கலே மண்டபத்தில் மணவழகர் மன்றத்தின் சார்பில் இம்மாதம் 5-6-7 தேதிகளில் தொடர்ந்து முத்தமிழ் விழா நடைபெற்றது. இரண்டாம் நாளாகிய 6-2-60ம் தேதி டாக்டர் ரத்தினவேலு சுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

தமிழ வணக்கப் பாடல் பாடப்பட்ட பின், மன்றத்தின் தலைவர் வழக்கறிஞர் பி. ஆர். கோகுலகிருஷ்ணன யாவரையும் வரவேற்றுப்பேசி, தலைவரையும் சொற்பொழிவாளர்களையும் அறிமுகப்படுத்தினர்.

தலைவர் டாக்டர் ரத்தினவேலு சுப்பிரமணியம் அவர்கள் பேசியதாவது.

பெரியோர்களே! நண்பர்களே! நமது நண்பர் கோகுலகிருஷ்ணன என்னைப் பற்றி புகழ்ந்து, நான் ஏதோ பேசுவேன் என்றார்!

திரு. கோகுல கிருஷ்ணனுக்கு இம்மாதிரி உங்கள் மத்தியில் என்னை இழுத்து விட்டு வேடிக்கைப் பார்க்க வேண்டுமென்று நீண்ட நாள் எண்ணியிருப்பார் என்று எண்ணுகிறேன்!

நான் ஏதோ எனது வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தவனை சந்திக்கு இழுத்து வைத்து விட்டார்!

நான் பொது மக்களிடம் அதிகம் தொடர்பு கொள்ள வேண்டுமென்று எண்ணியுள்ள அவரது ஆசையே என்னை உங்கள் முன் நிறுத்திவைக்கச் செய்து விட்டது!

நண்பர் கோகுல கிருஷ்ணன் முதலில் என்னைத் தலைமை வகிக்கும்படி கேட்ட போது "என்னை இதற்கெல்லாம் கூப்பிடாதீர்கள் பேசுகின்ற வேறுயாரையாவது பார்த்து தலைமை வகிக்கச் செய்யுங்கள்" என்று கேட்டுக் கொண்டேன்,

அவர் என்னை விட்டபாடில்லை! நீங்கள் தலைவர் தான், நீங்கள் நாற்காலியில் உட்கார்ந்தால் போதும், பேச வேண்டியதில்லை! நீங்கள் தான் தலைமை வகிக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். அவரது கட்டளையை தட்ட முடியாது நான் ஒப்புக்கொண்டேன்! பின்னர் கூறுகிறார், நான்கு வார்த்தைகள் பேசுங்கள் என்று.

நான் என்ன பேசுவது? இங்கு சிறந்த பேச்சாளர்கள் பலர் பேசப் போகிறார்கள். நல்ல தமிழ் படித்தவர்கள், பொது நல ஊழியர்கள் பேச இருக்கும் போது நான் என்ன பேசுவது?

நமது தமிழ் சிறந்த மொழி, மற்ற மொழிகளை விட, மற்ற மொழிகளுக்கு இருப்பதை விட சிறப்பு தமிழுக்குத் தான் உண்டு. அது இன்று உலகமெல்லாம் பரவி எங்கும் மதிக்கும் நிலையிலிருக்கிறது! ஆகவே எல்லோரும் தமிழை இன்னும் மேன்மையான முறையில்வளர்க்கப் பாடுபட வேண்டுமென்று பேசினர்.

நாடகக் கலையின் முன்னேற்றம் பற்றி இலட்சிய நடிகர் ராஜேந்திரன் விளக்கம்!

பின்னர் லட்சிய நடிகர்தோழர் எஸ். எஸ். இராஜேந்திரன் நாடகக் கலை என்பது பற்றிப் பேசியதாவது:

உலகப் புகழ் வாய்ந்த டாக்டரவர்களே! நண்பரவர்களே! தாய்மார்களே! நன்மதிப்பிற்குரிய டாக்டர் ரத்தினவேல் சுப்பிரமணியம் அவர்கள் இவ்விழாவுக்கு தலைமை வகிப்பது மிகவும் சிறப்பையும் பெருமையையும் அளிப்பதாகும். நமது டாக்டரவர்கள் உலகப் புகழ் வாய்ந்த சிறந்த மருத்துவர். அவரைப் பற்றி இந்த நாட்டில் அறியாதார் ஒருவரும் இருக்க முடியாது அவருடைய மருத்துவநிபுணத்துவத்தைப் பற்றி தெரிந்து கொள்ளாதவர் எவருமில்லை, அவர் ஓங்கு புகழ் எய்தி, மருத்துவத் துறையில் மக்கள் பணி செய்து வருகிறார், அவரைப் பார்க்க வேண்டும், அவரிடம் பேச வேண்டும் என்று எனக்கு நீண்ட நாளாகவே ஆவல். நண்பர் நடிகமணி டி. வி, நாராயணசாமி அவர்கள் அடிக்கடி நமது டாக்டரைப் பற்றிப் பேசிக் கொண்டே இருப்பார் அப்படிப்பட்ட உலகம் புகழும் டாக்டர் அவர்கள் தலைமையில் பேச வாய்ப்புக் கிடைத்தமைக்கு மிகவும் மகிழ்வெய்துகிறேன். மற்றும் எனக்கு பேசும் வாய்ப்புக் கிடைத்தமைக்கும் மகிழ்கிறேன்.

விழா துவங்குவதற்கு முன் டாக்டர் அவர்களுடன் சிறிது நேரம் தனியாகப் பேசிக் கொண்டிருந்தேன்! அவர் மிகவும் ஆர்வத்தோடும், அன்போடும் எங்களோடு பேசிக் கொண்டிருந்தார். அவரது ஆாவமிக்க சொற்கள் அன்பு மொழிகள் என்னைக் கவர்ந்தது!

நான் அவரோடு பேசிக் கொண்டிருந்த போது அவரை "உங்களுக்கு எப்போது ஓய்வு இருக்கும்! நான் வந்து பார்க்க வேண்டும்" என்று கேட்டேன் அதற்கு அவர், "அப்படி ஒரு நேரம் எனக்கு இல்லையே என்றார்! நான் அவரிடம் கேட்டுக் கொண்டேன்" தயவு செய்து எனக்காக சில மணி நேரம் ஒதுக்குங்கள். நான் "தங்கரத்தினம்" என்ற ஒரு சினிமா படம் எடுத்துக் கொண்டிருக்கிறேன். அந்தப் படத்தைப் பொது மக்கள் பார்ப்பதற்கு முன், உங்களைப் போன்ற பெரியவர்கள், உலகப் புகழ் வாய்ந்தவர்கள் பார்த்து நீங்களெல்லாம் கூறும் அபிப்பிராயங்களைச் சேர்த்து பின்னர் அந்த படத்தை வெளியிட எண்ணியிருக்கிறேன் அதற்கு நீங்கள் வந்து உங்களது அபிப்பிராயம் கூற வேண்டும்" என்று கேட்டேன் அவரும் ஒப்புக்கொண்டார்! இதை ஏன் இங்கு மேடையில் கூறுகிறேன் என்றால் அவர் கூறியதை ஞாபகப்படுத்தவும், அதை உறுதிபடுத்தவுமே நான் கூறுகிறேன்! டாக்டர் அவர்களே! தயவு செய்து எனக்காக ஒரு நாளை ஒதுக்கி உங்களுக்கும், வேலைத் தொந்திரவோடு எனக்கும் ஒரு நாள் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்!"

"நண்பர்களே! எனக்கு "நாடகக் கலை" என்பது பற்றி பேசும்படி தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

நாடகக் கலை இன்று நாட்டில் சிறப்புற்று, சினிமாவுடன் நல்ல முறையில் போட்டி போட்டு இருக்கிறது.

"நாடகக்கலை" சினிமாவில் வருவது போன்று நல்ல சிறந்த, காட்சிகளைக் காட்டி மக்களெல்லாம் ஆச்சரியப்படும் படியான நிலையில் வளர்ந்திருக்கிறது. மலைகள், அருவிகள், அரண்மனைகள் தர்பார் நடத்தும் மண்டபங்கள், சாலைகள் போன்ற பல விமான அலங்கார காட்சிகளெல்லாம் புதுமாதிரியாகச் சித்தரிக்கப்பட்டு மக்களிடம் காட்டப்பட்டு வருகிறது. இன்று தமிழ்நாட்டில் நாடகக்கலை வளர்ந்திருபபது போன்று வேறு எந்த நாட்டிலும் வளரவில்லை.

தமிழ் நாடகங்களில் பல புதுக்கருத்துக்களும், சீர்திருத்துக் கொள்கைகளும் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பல லட்சியங்களையும் புகுத்தி மக்களெல்லாம் வரவேற்கும் தன்மையில் நாடகக் கலை வளர்ந்திருக்கிறது. நாடகக்கலைவளர்வதற்கு பல அறிஞர்கள் அரும்பாடுபட்டிருக்கிறார்கள்.

முன்பு வயிற்றுப் பிழைப்புக்காக, நடிப்பவர்களின் வசதிக்காக வென்று இருந்த நாடகக் கலையை—மக்களின் அறிவை, அழிக்கும் வகையிலும், பகுத்தறிவுக்கும் ஒவ்வாத வகையிலிருந்த நாடகக் கலையை இன்று நாட்டு மக்களின் நன்மைக்குப் பயன்படும் துறையில் வளர்ந்திருக்கிறது. அது அப்படி வளர்வதற்காக எனது தலைவர் அறிஞர் அண்ணா அவர்களும், மற்றும் நமது திராவிட முன்னேற்றக் கழகமும் அருப்பாடு பட்டு வந்திருக்கிறது. மக்களின் அறிவுக்குப் பொறுத்த மற்ற வகையில் நடத்தி வந்த நாடகங்கள் இன்று நல்ல பல கருத்துக்களைக் கொண்டு மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் வகையான முறையிலும், நாட்டு நலனுக்காக உபயோகமாகும்படியான முறையிலும் வளர்ந்திருக்கிறது. இந்த பேசியவர்களில் நான் 8 வயது முதல் நாடகங்களில் நடித்தேன் என்று கூறினார்கள்!



(10-ம் பக்கம் பார்க்க)

ஆட்சியாளர்கள், நாடகக் கலையை அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்கக் கூடாது !

(ராஜேந்திரன் பேச்சு)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

அது உண்மை! அந்தக் காலங்களில் நாடகங்கள் இருந்த நிலையையும், இன்று நாடகங்கள் வளர்ந்திருக்கும் முறையையும் காணும் போது எவ்வளவோ மாறுபாடுகள் காணப்படுகிறது. அந்தக் காலங்களில் நாடகப் பாட்டுகளுக்குத் தான் மதிப்பிருந்து வந்தது. இந்தக் காலத்தில் வசனங்களுக்கு மதிப்பு வளர்ந்து, அந்த வசனங்கள் எல்லாம் பயனுள்ளளதாகவும் இருந்து வருகிறது.

நாடகங்களையும், சினிமாப் படங்களையும் மக்கள் கவனிக்கும்படியாக அது இன்று வளர்ந்திருக்கிறது! நான் சிறுவனாக இருக்கும் போது நடித்த நாடகங்களில் இருந்த நிலையை எண்ணும் போது எனக்கே மிகுந்த வியப்பையும். மகிழ்ச்சியையும் தருகிறது!

என்னுடைய எண்ணங்கள், ஆசைகள் எல்லாம் இன்று நிறைவேறி இருக்கிறது!

நாடகக் கலை என்ருல், நாடகக் கலைஞர்கள் என்ருல் இழிவாக நினைத்த காலம் மாறி நாடகக் கலையையும் கலைஞர்களையும் நாடு போற்றிப் புகழும் நிலைக்கு வந்திருக்கிறது!

நான் பழைய காலத்து தெருக் கூத்துகளைப் பார்த்திருக்கிறேன்! ஒரு சிறு கீத்துக் கொட்டகை போட்டிருப்பார்கள் அதில் ஒரு வேஷ்டியையோ, ஒரு மறைப்பையோ கட்டி யிருப்பார்கள். வள்ளி நாடகமோ, பவளக் கொடி நாடகமோ, நல்லதங்காள் நாடகமோ நடத்துவார்கள்! அந்த நாடகங்களில் நடிக்கும் நடிகர்களே, தங்களுக்கேற்ற பாகங்களை ஏற்றுக் கொண்டு, அவைகளுக்கேற்ற வசனங்களையும், பாடல்களையும் அவர்களே அமைத்துக் கொண்டு நடிப்பார்கள்! அந்த நாடகங்களில் எதுவும் நன்மை பயக்கும்படியான நிலையே இல்லா திருந்தது. இந்த நிலையைப் பார்த்து பலர் வருந்திஞர்கள், நாடகக் கலையை உயர்த்தப் பாடுபட முன் வந்தனர்!

அப்படி முன் வந்தவர்களில் காலஞ் சென்ற நாடகப் பேராசியர் சங்கரதாஸ் சுவாமிகளும் ஒருவருமாவார்.

அவர் பல நாடகங்களை எழுதி, பாடல்கள் புனைந்து கொடுத்து பயிற்சி கொடுத் நடிக்கச் செய்தார்.

பின்னர், பல கம்பெனிகள் ஏற்பட்டது. அவைகளும் நல்ல நாடகங்களை நடித்து வந்தார்கள். பின்னர் நாடகங்களில் மறுமலர்ச்சி தோன்றியது. நாடகாசிரியர் திரு. சம்பந்த முதலியார் பல நாடகங்களை எழுதி, நாடகக் கலையை உயர்த்தி அதனுல், நாட்டு மக்கள் பயன்படும் படியான வகைகளைச் செய்தார். அவரே பல நாடகங்களில் நடித்தார். அதே போன்று சுகுண விலாஸ் சபா போன்ற பல சபாக்கள் தோன்றி நாடகக் கலைக்குப் புத்துயிரளித்தது!

மற்றும் திரு. டி. கே. ஷண்முகம் அவர்களது ஷண்முகானந்த சபா, நாடகக் கலைக்காக அரும்பாடு பட்டது அந்தக் கம்பெனியில் நான் சிறுவனாக இருந்தபோது நடித்து வந்தேன். அந்தக் கம்பெனி ஈரோட்டில் பல நாடகங்களை நடத்தி வந்தது! அதுபோது நானும் நடிகமணி நாராயணசாமியும்—பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களைச் சந்தித்துப் பேசுவோம். அப்போது தான் அறிஞர் அண்ணு அவர்களிடம் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது! அண்ணு அவர்கள் எங்கள் கம்பெனியின் நாடகங்களுக்கு விமர்சனம் எழுதுவார்! பெரியார் அவர்களும் டி. கே. ஷண்முகம் அவர்களின் நாடகக் கம்பெனியின் நாடகங்களைப் பார்க்க வருவார்! அந்த நாடகங்களையும் பாராட்டுவார்!

அறிஞர் அண்ணு அவர்கள் பல நாடகங்களை எழுத ஆரம்பித்தார்! அவர் அப்போது எழுதிய நாடகங்களில் முக்கியமான நாடகம் "வேலைக்காரி" அந்த வேலைக்காரி நாடகம் டி. கே. சகோதரர்களின் கம்பெனிக்காக எழுதப்பட்டது! திரு. ஷண்முகம் அவர்கள் வேலைக்காரி நாடகத்தை நடிக்க ஒப்புக்கொண்டு, அதில் வரும் காளி கோவில் காட்சியில் ஆனந்தன் காளி உருவத்தை உடைக்கும் பகுதியை நீக்கும்படி அண்ணு அவர்களிடம் கேட்டார். ஆனுல் அறிஞர் அண்ணு அவர்கள் கூறினுர், "அண்ணுத்துரை பேனு அந்தமாதிரி வேலை செய்யாது" என்று கூறினுர்!

பின், எனது மதிப்பிற்குரிய அண்ணன் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் அந்த நாடகத்தை வாங்கி நடித்தார்! அவருச்கு அந்த பெருமையும் வாய்ப்பும் கிடைத்தது!

அறிஞர் அண்ணு அவர்களின் பல பல நாடகங்களை நடிப்பிசைப் புலவர் நடித்தார்! சிறழிந்து, மக்களுக்குப் பயன் படாதிருந்த நாடகக் கலையை தென்னகத்தில் உயர்த்தி, அதற்கு வழிகாட்டியாக விளங்கியவர் அறிஞர் அண்ணு அவர்கள் ஆவார்கள்! தென்னகத்தில் அண்ணு அவர்களால்தான் நாடகக் கலை வளர்ந்தது!

இன்று சினிமாவையும், நாடகங்களையும் ஒழிக்கவேண்டுமென்று கூறும் நமது முன்னுள் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஈரோட்டில் நாடகக் கலையால் நாட்டுக்கு என்ன பயன் ஏற்படுகிறது என்று பேசியதை உங்களிடம் கூற ஆசைப்படுகிறேன்!

நமது அண்ணு அவர்கள் 'சந்திரோதயம்' என்ற நாடகம் ஒன்றை எழுதி, அவரும் அவரது நண்பர்களும் சேர்ந்து பல ஊர்களில் நடித்துவந்தார்கள்! அந்த நாடகத்தில் நமது அண்ணு அவர்கள் பல வேடங்களைத்தாங்கி நடித்து வந்தார்! அதே நாடகம் ஈரோட்டில் பெரியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது! நாடகத்தைப் பெரியார் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்து, நாடகத்திலுள்ள நல்ல கருத்துக்களையும் நடித்தவர்களின் திறமையையும்பார்த்து, நாடகத்தின் இறுதியில் அவர் பேசும்போது கூறினுர், "நான் ஆயிரம் கூட்டங்களில் பேசிவரும் பலனை அண்ணுதுரை ஒரு நாடகத்தில் பெற்று விடுகிருர், மக்களிடம் கூட்டத்தில் பேசி அவர்களைத் திருத்துவதைவிட நாடகங்கள் மூலம் திருத்துவதே பயனுள்ளதாகும்" அதற்கு வழிகாட்டியாக இருந்தவரும், இருபதாம் நூற்ருண்டின் இணையற்ற தலைவருமான அறிஞர் அண்ணு அவர்களேயாகும்!

அறிஞர் அண்ணு அவர்கள் கலை உலகில் நல்ல திருப்பத்தைக் காண்பித்தார். அண்ணுவின் அறவழியை இன்று பலர் பின்பற்றுகிருர்கள் ஆகவே கலை உலகின் சார்பில், கலைஞர்களின் கூட்டங்களைவிட நாடகங்கள் மூலம் பயனுள்ள வேலை செய்ய முடியும்' என்றுகூறினுர். அன்று அவர் பேசிய பேச்சுக்கள் இன்றும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது!

இந்த நாட்டில் நாடகக் கலையும், படக்கலையும் உயர்ந்து அவைகள் நாட்டு மக்களின் நன்மைக்குப் பயன் படுகிறது!

நமது அரசாங்கத்தாரிடமும் எனது பணிவான வேண்டுகோளைவிட ஆசைப்படுகிறேன்! மிகவும் சிறப்போடு வளர்ந்து வரும் நாடகக் கலைக்கும், படக் கலைக்கும் பாதுகாப்பு கொடுத்து ஆதரவு கொடுக்க வேண்டும்! ஒரு நாடு உயர்ந்து நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழவேண்டுமானுல் அந்த நாட்டிலுள்ள கலைகளும் வளரவேண்டும். ஆகவே இதற்கானவன செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்- கலையின் மூலம் தான் நாட்டைத் திருத்த முடியும்.

உதாரணத்திற்கு ஒன்றை கூறி முடிக்கிறேன்! நாட்டில் பிச்சைக்காரர்கள் மலிந்திருக்கிருர்கள் என்பதைக் காட்டி, அதை ஒழிப்பதற்கு வழிகாண வேண்டுமானுல், தெருவில் பிச்சைக்காரர்களைக் காட்டி அவர்களுக்கு உதவ வேண்டுமென்று சொல்வதால் அது நடவாது. நமது நடிகமணி நாராயணசாமிக்கு முகத்தில் பவுடர் பூசி, தாடிவைத்து, கையில் தடியைக் கொடுத்து, தள்ளாடி நடிக்கவைத்து பசிக் கொடுமையைக் காட்டி அந்த நிலைகளை மாற்ற வழி செய்ய வேண்டுமென்று நாடகத்தில் நடித்தால்— அதைப் பார்க்கும் மக்கள் உள்ளம் துடித்து, மனம் இளகி, இந்த மாதிரி நிலைகளைப் போக்க வழி செய்ய வேண்டுமென்று எண்ணுவார்கள்! பல நாடுகளில் நாடகங்களாலும், படங்களாலும் சமுதாயத்தை திருத்தி இருக்கிருர்கள்.

ஆகவே நமது அரசாங்கம் நாடகக்கலையை எந்தவித அரசியல் கண்கொண்டும் பார்க்காது அது வளர்வதற்கான வகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்!

எனக்கு இந்தக் கூட்டத்தில் பேசும் வாய்ப்புக் கொடுத்து பெருமைப்படுத்தியதற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மகிழ்ச்சியூட்டும் செய்தி!

மதுரை செல்வம் பதிப்பகத்தார் வெளியிடும்

"பொன்னி"

(மாத இதழ்)

டெம்மி 1 x 8 புத்தக உருவில்.

தனிப்பிரதி விலை 50 காசுகள்.

ஏராளமான பக்கங்களுடனும், இரு புறமும் கண்ணைப் பறிக்கும் வண்ணக் கலர்களாலான வார்னிஷ் பிரிண்டிங்குடன் விரைவிலேயே வெளி வர இருக்கிறதென்ற மகிழ்சிச்செய்தியைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

"பொன்னி"

அலுவலகம்

11, வெண்கலக்கடைத் தெரு,

மதுரை.

நாம் மிகமிகச் சாமன்யமானவர்கள்தான்
ஆனால் - நமது கொள்கைகள்
சாமான்யமானதல்ல, சிலாக்கியமானவைகளாகும்!

(அண்ணா பேச்சு)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்ல வடை சுடுவதற்கும், பொரிவறுப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது! பொரி வறுப்பது சுலபம்! வடை சுடுவது கடினம்!

வடையை எண்ணெயிலும் சுடலாம், நெய்யிலும் சுடலாம்! பொரிவறுப்பதற்கு அவைகள் தேவை இல்லை—சாய்ந்த சட்டி இருந்தால் போதும் பொரி வறுத்து விடலாம்!

ருசியுள்ள வடை சுட வேண்டுமென்றால் நல்ல உளுந்தம் பருப்பு வாங்கி தண்ணீரிலே ஊறவைக்க வேண்டும். உளுந்தம் பருப்பில் மேலே தோல் இருந்தால் நன்றாக உரித்து விட்டு அரைக்க வேண்டும்! அடுப்பில் பானலை வைத்து எண்ணெயை ஊற்றிட வேண்டும்! எண்ணெய் நன்றாக காய்ந்த பிறகு உள்ளங்கையில் அழகாக தட்டி, பானலிலே இருந்து சுலபமாக எடுப்பதற்கு அதற்கு நடுவே கொஞ்சம் இடைவெளி விட்டுப்போடுகிறார்கள்! எண்ணெய்க் கொதிப்பில், இருந்து வடையை எடுத்து வைக்கிறார்கள். நீங்கள் தின்கிறீர்கள்! செய்தது தாய்மார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் கூறுகின்ற, திராவிடநாடு திராவிடருக்கே என்னும் லட்சியம் உளுந்தம் வடையைப் போன்றது!

காங்கிரஸ்காரர்களின் பிரச்சாரம் பொறி வறுப்பது போன்றதாகும்!

எத்தனையோ பிரச்னைகளைப் பற்றி நான் இங்கே கூறுகிறேன். அவர்கள் பேசவில்லை, மாறாக தாக்கிப் பேசுகிறார்களே என்று சங்கடப்படக் கூடாது!

நாம் கேட்கின்ற திராவிட நாடு வெங்காய நாடு என்று கூறுகிறார்கள், வெங்காயத்தை உரிக்க உரிக்க ஒன்றுமே இருக்காது. அதைப் போல் நாம் சொல்லுகின்ற திராவிட நாடு இலட்சியத்தில் ஒன்றுமே இல்லை என்று கூறுகிறார்கள்! நான் சொன்ன வடை. உதாரணத்தில் வெங்காயமும் அரைபட்டுவிடும்!

வெங்காயத்தில் ஒன்றுமில்லாமல் போகாது! வெங்காயத்தை எந்தப் பண்டத்தில் போடுகிறோமோ அது மணக்கும்! குடும்பத்தோடு இருக்கிற அமைச்சர்கள், தங்கள் துணைவியரிடம் நல்ல வெங்காயமாக நாலு வெங்காயம் போட்டு, வடை சுடும்படி சொல்லி சாப்பிட்டால் வெங்காயத்தின் அருமை தெரியும்!

காமராசருக்கு துணைவியார் இல்லை நீங்களே அவருக்கு வடை பாயாசத்தோடு விருந்து வையுங்கள்! உரித்த வெங்காயம் போட்டு தயாரித்த வடையைப் பற்றி எடுத்துச் சொன்னால் விஷயம் முடிந்தது.

அவர்கள் திட்டுகிறார்களே என்பதற்காக பதிலுக்குப் பதில் பேசினால் பொருளுமில்லை, பயனுமில்லை! நாம் நமது கொள்கையை எடுத்துச் சொல்லி, இயக்கத்தின் வலிவை அதிகமாக்க வேணடும்! இந்த வலிவுக்கு அடுத்த தேர்தலில் பலன் கிடைத்தாலும் கிடைக்கக்கூடும்! இப்போது இருக்கிற வலிவு ஒன்றுக்குப் பத்தாக பெருக வேண்டும்! நாம் மலைத்துப் போகிற அளவுக்கு வலிவு அதிகமாக வேண்டும்!

நாம் மிகமிகச் சாமன்யமானவர்கள் தான்—ஆனால் நாம் எடுத்துச் சொல்லும் கொள்கைகள் சாமான்யமானதல்ல, சிலாக்கியமானவைகள்!

பட்டாளத்தைத் திரட்டி,போர் முறையினால் பிணக் குவியலை குவித்து, இரத்த ஆறு ஓட வைத்துத் தான் நமது லட்சியத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லவில்லை—நாமும் விரும்பவில்லை!

மக்களை அன்பால் கவர்ந்து, அறநெறியில் ஈடுபடுத்தி, அதன் மூலமே நமது லட்சியத்தை ஈடேற்றிக் கொள்ளவேண்டும். திராவிடத்தை பெற வேண்டும்! இப்படிக் கூறுவதை மாற்றுக் கட்சிக்காரர்கள் கனவு காண்கிறார்கள் என்று கேலி பேசுகின்றனர்!

கனவு காண்பதிலே இரண்டு வகை உண்டு! ஒரு வாலிபன். நேற்று ஒரு கனவு கண்டேன் என்று உங்களிடத்திலே சொன்னால் என்ன கனவு என்று கேட்பீர்கள்!

இரவு பன்னிரெண்டு மணி இருக்கும். யாரோ, என்னைத் தட்டி எழுப்புவது போன்ற உணர்வு ஏற்பட்டது மெள்ள கண் விழித்தேன்! தொப்பை பெருத்திருந்தது—பரட்டை தலை—நீளமான இரத்த காக்கு—கோரைப் பற்கள்! பார்ப்பதற்கே பயமாக இருந்தது. அந்த கோர உருவத்தை! இப்படி பிசாசு கனவு கண்டேன் என்று கூறினால் என்ன அர்த்தம்? இது ஒரு வகையான கனவு!

இன்னொரு வகையான கனவும் உண்டு!

தேனிலவு காய்ந்து கொண்டிருக்கிறது! மாந்தளிர் போன்ற மேனியாள், மெல்லிய பூங்கரத்தால் மேனியைத் தடவிச் செல்கிறாள்! அருகே இருந்த யாழை எடுத்து மீட்டுகிறாள்! அவளுடைய கானத்தில் மெய் மறந்தேன்! அவளது கரங்களைப்பற்றி யிழுக்க அருகேச் சென்றேன். நாதம் நின்றது—நங்கையையும் காணவில்லை! என்கிறான் மற்றொரு வாலிபன்! இதில் எந்தக் கனவை விரும்புவீர்கள்? மங்கை கனவிலே வந்து மயக்கியதையா கோர உருவத்தோடு நின்ற பிசாசையா? இப்படிக் கூறுவதால் 'பார், பார் அண்ணாத்துரை மக்களை மயக்க, மங்கையைப்பற்றி கூறுகிறான்' என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லக் கூடும்! நான் ஒன்றும் இட்டுக் கட்டி கற்பனையிலே சொல்லவில்லை. பாரதி விழா என்று ஆண்டுக்கொருமுறை கொண்டாடுகிறார்களே அவர்களுக்கு புரியாமல் இருக்கலாம். நான் சொன்னது பாரதி எழுதிய பாடலொன்றின் சுருக்கத்தைத் தான்!

'ஆடுவோமே பள்ளுபாடுவோமே ஆனந்தசுதந்திரம் அடைந்து விட்டோமென்று பாரதி பாடிய நேரத்தில் பைத்தியக்காரன் உளறுகிறான், கனவு காண்கிறான் என்று கூறினாகள்!

இந்தியா விடுதலை அடைய வேண்டுமென்று இன்பக் கனவு கண்ட தமிழர்களில் பாரதியும் ஒருவர்!

நாடு விடுதலை அடைய வேண்டுமென்று காந்தி கனவு கண்டார். சுயராஜ்யம் பெறாமலா போய்விட்டார்? நாம் சுதந்திரமடைவோ மென்று நமது பாட்டனாரும், பாட்டனாரும் அறிந்தார்களா? நம் காலத்திலேயே சுதந்திரம் பெறுவோம் என்று எண்ணினோமா? இல்லையே! வெளி உலகத்தினர் கூட இந்தியா சுதந்திர மடையாது என்று தான் நினைத்தார்கள்! கனவு காண்கிறாகள் என்று பேசுகின்ற பேச்சு, மண்டைக் கனம் பிடித்தவர்கள் பேசுகின்ற பேச்சு! நாம் காணுகின்ற கனவு நம் வாழ்நாளிலேயே நினைவாகும்! அவர்கள் கண்ட கனவு 1947ல் பலித்தபோது, நமது கனவு மட்டும் பலிக்காமல் போகுமா?

நாம் கனவு தான் காண்கிறோம். காந்தியார் கண்ட கனவு பலித்தது போல் நம் கனவு பலிக்கும்! இப்படிக் கூறுவதால் காங்கிரஸ்காரர்கள் 'பார் பார்! காந்தி எங்கே; அண்ணாத்துரை எங்கே? இருவரும் எப்படி சமமாவார்கள்' என்று கேட்கக் கூடும்! நான் காந்தியாருக்கு சமம் என்று கூறவில்லை, நமது லட்சியம், நாம் காணுகின்ற கனவும் அவர் கண்ட கனவும் ஒரே தன்மை-நோக்கம் கொண்டது என்பது தான்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் கனவு காண்கிறார்கள் என்று அமைச்சர்கள் கூறுகிறார்கள், கனவு காண்கிறார்கள் என்று கூறுகிறார்களே தவிர, காணுகின்ற கனவு நல்லதல்ல, கெட்டது என்று எந்த அமைச்சரும் எடுத்துச் சொல்லவில்லை!

'திராவிடநாடு தரமாட்டோம்—பெற்றால் நிலைக்காது' என்று கூறுகிறார்களே தவிர, இன்னின்னது இருந்தால் திராவிட நாடு வாழும்! இன்னின்னது இல்லை ஆகவே தரமாட்டோம் என்று அதற்கான காரணங்களை எந்த அமைச்சர்கள் சொன்னார்கள்?

இங்கே இருக்கிற அமைச்சர்கள் மாதத்திற்கு மூன்று தடவை டெல்லிக்கு செல்கிறார்கள்! உத்தியோகத்திலே உயர்வு காண்பதற்கும், அங்கே மந்திரி பதவி கிடைக்குமா என்று பார்ப்பதற்கும் தான் அடிக்கடி போகிறார்கள். இதனாலே மக்களுக்கு கிடைக்கும் லாபமென்ன?

டில்லி ஆட்சியின் கீழ் தென்னாடு அடங்கிக் கிடப்பதால் மக்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது? தொழில் கிடைத்திருக்கிறதா? வாழ்வுதான் மலர்ந்ததா? வெள்ளைக்காரன் காலத்திலே வாழ்ந்ததை விட, இப்போது என்ன மக்கள்-அதைவிட சுகமாக வாழ்கிறார்களா? ஜாதி பேதம் மறந்து வாழ்கிறார்களா? இதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்!

பழைய நிலையை நாம் மீண்டும் அடைய வேண்டுமானால் நாம் தனியரசு பெற்றாக வேண்டும்! நமக்கென்று ஒரு துரைத்தனம் வேண்டும். அப்போது தான் நமக்கு தேவையான எல்லாவற்றையும் பெறமுடியும். நாம் தனியரசு பெற வேண்டுமானால் எப்படி பெறுவது, அதற்கு வழிவகைகள் என்ன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

நாம் சொல்லி வருகின்ற கருத்தினை தமிழகத்திலே உள்ள பெரும் பகுதியினர் புரிந்து கொண்டிருக்கிறார்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள் அத்தனை பேரும் புரிந்து கொண்டிருக்கின்றனர்.

நீங்கள் அறிந்த இந்த உண்மையை மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். மற்றவர்கள் உள்ளத்தில் நமது கொள்கை பதிய வேண்டும். அப்படிப்பட்ட பணியிலே நண்பர்கள் உற்சாகத்தோடு ஈடுபட வேண்டு மென்று கேட்டுக் கொண்டு உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்!

egistered as a Newspaper in CEYLON
Regd No M. 7074 விலை 16 காசு **MALAIMANI** PhoneNo. 83285
இலங்கையில் 20 சதம்

(கண்ணதாசன் பேச்சு)

5-ம் பக்கத் தொடர்ச்சி

இந்த கட்டத்தில் நமது அறிஞர் அண்ணா அவர்கள் புகுத்தியுள்ள கருத்துக்களும் மக்களுக்கு உணர்ச்சிவரும்படியான வசனங்களும் இதுவரை யாரும் செய்யமுடியாத அளவு செய்திருக்கிறார். இரக்க குணம் இல்லாத வேதாசல முதலியார், கொடுமைக்கார வேதாசல முதலியார் தாம் செய்த கொடுமைகளையும், இரக்கமற்ற செய்கைகளையும் அவரே உணர்ந்து நல்வழிப்படும்படி பாத்திரத்தை அமைத்திருக்கிறார். அந்த இடத்தில் அண்ணா அவர்கள் மணியின் மூலம் ஒரு சொல்லை அமைக்கிறார். "ஆனந்தா கத்தியைத் தீட்டுவதற்குமுன் உன் புத்தியைத் தீட்டு" என்பதாகும். அந்த கதை முழுவதற்கும் மணியையே முக்கியப் படைப்பாக அமைத்துள்ளார். அதேபோன்றுதான் நமது அண்ணா அவர்கள் எழுதிய ஓர் இரவு கதையுமாகும்! ஓர் இரவு கதையில் பணத் திமிர்பிடித்த ஜமீன்தார் செய்யும் அக்ரமங்களையும், அதனால் ஏழை மக்களும், அபலைகளும் படும் துன்பங்களையும், தொல்லைகளையும் மிக நல்ல முறையிலே அமைத்து ஒரே இரவில் நாட்டில் நடக்கும் ஆபாசங்களை, அக்ரமங்களை விளக்குகிறார்! இன்று பட உலகிலும், நாடக உலகிலும் ஒரு மறுமலர்ச்சி உண்டாகியிருக்கிறதென்றால் அது அந்த இரண்டு படங்களில் உள்ள படைப்புத் தன்மையும், பாத்திர அமைப்புத் தன்மையுமே ஆகும்.

நமது கலைஞர் கருணாநிதி அவர்கள் தீட்டிய மனோகராவை எடுத்துக்கொள்ளுங்கள்! அதன் மூலக் கதையை நாடகாசிரியர் பம்மல் சம்மந்த முதலியார் எழுதிய கதையாகும்! அதே கதைக்கு நமது கலைஞர் கருணாநிதி மெருகு கொடுத்து, பாத்திர அமைப்புகளுக்கு தர வேண்டிய பெருமைகளைத் தந்து மக்கள் மனம் உற்சாகப்படும்படி கருத்துக்கள் பார்ப்பவர் மனதில் பதியும்படி எழுதியிருக்கிறார்! அதே போன்று கலைஞர் எழுதிய பராசக்தி என்ற படத்தில் தனது தங்கைக்கு வரும் இன்னல்களை கதாநாயகன் நீக்குவதற்குச் செய்யும் காரியங்களை மிக அழகாக எடுத்து காட்டியிருக்கிறார். அந்த படத்தில் ஆரம்ப முதல் இறுதி வரை விறுவிறுப்பும் உணர்ச்சியும் அளிக்கின்ற முறையில் படைத்திருக்கிறார்! ஆனால் இப்போது கதை யெழுதுபவர்கள் தொடர்போடும், மச்களுக்கு உபயோகப்படும்படியான முறையிலும் எழுதுவதில்லை!

சமீபத்தில் ஒரு சிற்றரசனைப் பற்றிய ஒரு சமஸ்தானாதிபதியைப் பற்றிய ஒரு சரித்திரக் கதை படமாக்கப்பட்டது, அதில் அதிக பலம் வாய்ந்தவனும், அளவுக்கு மீறிய போர் பலத்தையுடையவனுமான வெள்ளையர்களிடம் அவன் ஆட்சிக்குட்பட்ட சிற்றரசன் ஒருவன் அந்த வெள்ளையர்களை எதிர்க்கிறான், அவன் ஆட்சிக்குக் கட்டுப்படாது இருக்கிறான், தனக்கு இருக்கும் பலத்தையும் உணராது போருக்குத் தயாராகுகிறான்! பின் போரில் தோற்கிறான். கோட்டையை விட்டு தலைமறைவாக ஓடுகிறான்! இந்த மாதிரி பாத்திரப் படைப்பு தந்து அந்த சிற்றரசன் பலம் வாய்ந்த வெள்ளையனை, 'வெள்ளை நரியே, நாயே, பேயே, பிழைக்க வந்தவனே ஓடு, வெட்டுவேன், குத்துவேன்' என்று ஒரு மணி நேரம் வீராவேசத்தோடு அவனை பேச வைக்கிறார்கள், இதில்தான் பாத்திரப் படைப்பின் திறமையற்ற செயல்கள் நன்கு விளங்குகிறது! தன் பலத்தை உணர்ந்து, எதிரியை எதிர்க்க வேண்டும், இன்றேல் சமாதான முறையில் நடக்க வேண்டும்! இதை நான் சிற்றரசனாக நடித்தவரைப் பற்றி குறை கூறவில்லை! பின்னாலிருந்து தங்களை அறிவிற் சிறந்த மேதைகளென்று நினைத்து கதை, அமைத்தார்களே, அந்த மேதைகளைப் பற்றித்தான் கூறுகிறேன்! முன் யோசனையோடும், அறிவிற்குப் பொருந்தும் தன்மையிலும் கதையை அமைக்க வேண்டும்! கதையைப் பொருத்தமான முறையில் அமைக்க வேண்டும்! அப்படி செய்யாது, வீரம் பேசியவன் பின்னால் வீழ்ச்சியுறும் வகையில் படைப்பதென்பது படைப்பின் திறமையற்ற தன்மையைத்தான் காட்டுகிறது!

அதற்குப்பின் அதே கதையைத் தொடர்ந்து நான் ஒரு கதையைப் படைத்தேன்!

அந்தப் படத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியும்! அதுதான் "சிவகெங்கைச் 'சீமை'" படம்! தலைமறைவாக இருந்த ஊமைத்துரை மருது சகோதரர்களிடம் அடைக்கலம் புகுகிறான்! பலம் பொருந்திய வெள்ளைக்காரர்களிடம் பகைத்துக் கொள்ள மனமில்லாத பெரிய மருது, சமாதான முறையில் சமரசம் செய்ய முயற்சி செய்கிறான்! அந்தக் கருத்துப்படி சமாதானப் பேச்சு நடக்கிறது. சமரசம் நடக்குமிடத்தில் பேச்சு வார்த்தைக்கு முரணாக ஊமைத்துரையைக் கைது செய்ய வெள்ளையர் முனைகின்றனர், பின்னர் போர் மூளுகிறது! இதில் நல்ல முறையில் பாத்திரப் படைப்பு தந்து, கருத்துக்கு உகந்த வகையில் கதையையும் அமைத்தேன்! எப்பொழுதும் கதை அமைக்கும் போது ஒன்பது ரசங்கள் பொருந்தும்படி அமைக்க வேண்டும்! என்று கூறி முடித்தார்.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ், 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை